ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය්

07.05.2014 - மலர் 11, இதழ் 10



## வானிலிருந்து மின்சாரம்



## கரடி பொம்மையின் பிறப்பு



## ஹப்புத்தளையில் அபூர்வ பங்களா...



## 'விஜய்' வீதியோர நிகழ்வுகள்...

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






01) இங்கு எத்தனை கேக்குகள் உள்ளன?

1. ஒன்று 2. மூன்று
3. இரண்டு



02) அதிகளவு எண்ணிக்கையிலான மெழுகுவர்த்திகள் உள்ள கேக்கில் '✓' அடையாளமிடுக.

03) மொத்தம் எத்தனை மெழுகுவர்த்திகள் உள்ளன?

..........................................

04) அணைந்துள்ள மெழுகுவர்த்திகள் எத்தனை?

..........................................

01) இங்குள்ள எழுத்துக்கள்;

1. தமிழ் எழுத்துக்கள்
2. ஆங்கில எழுத்துக்கள்
3. சிங்கள எழுத்துக்கள்




02) படத்தில் இரண்டாவது வரிசையிலுள்ள எழுத்துக்களை எழுதுக.

..........................................................

03) கடைசி வரிசையில், கடைசியாக உள்ள எழுத்து யாது?

..........................................................



01) இங்குள்ள ஏதேனும் ஐந்து விலங்குகளின் பெயர்களை உரிய முகங்களுக்கு அருகில் எழுதுக.

02) வீட்டைக் காவல் காக்கும் மிருகம் எது?

1. பூனை 2. சிங்கம் 3. நாய்

03) 'பிளிறும்' மிருகம் எது?

1. மாடு 2. யானை 3. குரங்கு

04) நீளமான கழுத்தை உடைய மிருகம் எது?

..........................................

இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.



-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk

# நீர் வளம் கொண்ட அரிய வகை வைரக்கல் கண்டுபிடிப்பு...!





**பூமியின் மேற்பரப்பில் உள்ள சமுத்திரங்களின் நீரைப் போன்று, பூமியின் உள்ளகப்பகுதியிலும் (மூடகப் பகுதியிலும்) நீர் இருக்கின்றது என்ற கருத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில், அண்மையில் பூமியின் உள்ளகப் பகுதியில் இருந்து நீர் வளம் கொண்ட அரியவகை வைரக்கல் துண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**






'வேறு ஒரு கனிமப் பொருள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டிருக்கும்போதே, நீர் வளம் மிக்க இந்த அரியவகை வைரக்கல் எதிர்பாராத விதமாக கண்டுபிடிக்கப்பட்டது'

கெனடாவின் எல்பேர்ட்டா பல்கலைக்கழகத்தின் பௌதிக ரசாயனவியல் விஞ்ஞானியான க்ரஹம் பியர்சன் தலைமையிலான குழுவினர் தற்போது இது தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர். வேறு ஒரு கனிமப் பொருள் பற்றிய ஆய்வினை மேற்கொண் டிருக்கும்போதே, நீர் வளம் மிக்க இந்த அரியவகை வைரக்கல் எதிர்பாராத விதமாக கண்டுபிடிக்கப்பட்டதாக பியர்சன் கூறுகின்றார்.

எந்தவித பெறுமதியும் அற்ற வெறும் கற்துண்டு போன்று இது தோன்றினாலும், 'ரிங்வூடைட்'(Ringwoodite) எனும் இந்த அரியவகை வைரக்கல்லின் நிறையில் 1.5 சதவீதம் நீர் அடங்கியுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ரிங்வூடைட் கனிமமானது, எரிகற்களில் அடங்கியுள்ளது. எனினும், பூமியின் உள்ளகப் பகுதியில் இருந்து கண்டுபிடிக் கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். ரிங்வூடைட் கனிம வளப்படிவானது, அதிக அழுத்தத்தின் விளைவாக அதிக ஆழத்திலேயே உருவா கின்றது. ஆனால், இந்த அரிய வகை வைரக்கல் துண்டானது, வழமையை விடக் குறைந்த ஆழத்திலேயே உருவாகியுள்ளது. எனவே, வணிகரீதியில் இது பெறுமதி அற்றதாகவே கருதப்படுகின்றது. எனினும், பூகோளவியல் தொடர்பான விஞ்ஞானி களுக்கு இது மிகவும் பெறுமதிமிக்க வைரக்கல்லாகும்.

## அரிதான நிகழ்வு

பூமியின் ஆழ்பகுதியில் இவ்வாறு அரியவகை வைரக்கல் கிடைப்பது மிகவும் அரிதான நிகழ்வாகும். பிரேசிலில் கிடைத்த இந்த வைரக்கல்லானது, ஒரு கிராமின் பத்தில் ஒரு பங்கு நிறை யுடையது. பூமியின் மூடகப்பகு தியில், மாறுநிலை வலயத்தி லிருந்து கண்டுபிடிக்கப்படும் இவ்வாறான கனிமவளங்கள் மிகவும் அரிதானவையாகவே கருதப்படுகின்றன. அந்தவகையில், இந்த வலயத்திலிருந்து கிடைத்திருக்கும் ரிங்வூடைட் வைரக்கல்லானது, மிகவும் அரியவகையைச் சார்ந்ததே!

பிரேசிலில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வொன்றின்போது கபில நிறத்திலான வைரக்கல் லொன்று கண்டுபிடிக்கப்பட் டதை அடுத்தே, பூமியின் ஆழ்பகுதியில் ரிங்வூடைட் உள்ளதென்ற விடயம், உறுதி செய்யப்பட்டது.

அதேபோன்று, இதனூடாக பூமியின் மூடகப்பகுதியின் மாறுநிலை வலயத்தில் நீர் உள்ளது என்ற நீண்டகால வாதப் பிரதிவாதங்களை நிரூபிக்கவும் இந்த கண்டுபிடிப் பினூடாக வாய்ப்புக் கிட்டியுள் ளது. இந்த வலயத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட ரிங்வூடைட்டில் 1.5 சதவீதம் நீர் அடங்கியுள்ளது. இந்த நீர் திரவமாக அன்றி ஹைட்ரொக்சைட் அயனாகவே காணப்படுகின்றது.

இதன்படி பூமியின் மூடகப்பகுதிக்குட்பட்ட மாறுநிலை வலயத்தில் (410 -660 கிலோமீற்றர் ஆழத்தில்) பாரிய நீர் கொள்ளளவு இருப்பதாக அனுமானிக்கப்படுகின்றது. உலகில் உள்ள அனைத்து சமுத்திரங்களிலும் காணப்படும் நீர் கொள்ளளவினை ஒத்த நீர் வளம் இங்கு காணப்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதற்கமைய, பூமியின் மூடகப்பகுதியில் பெருமளவு நீர் தேங்கியுள்ளதாகக் கருதப்படுகின்றது.சமுத்திர தகட்டுப்பகுதிகள் மற்றும் நிலத் தகட்டுச் செயற்பாடுகளினால் ஏற்படும் நகர்வு காரணமாக புவித்தகடு மீள்சுழற்சிக்கு உட்பட்டுள்ளது. இதனால், நீரானது மூடகப்பகுதிக்கும் ஊடுருவியுள்ளது.




எவ்வாறாயினும், இது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

-(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவில் பாறை

ஓர் ஊரில் கோவில் ஒன்றில் பாறை ஒன்று இருந்தது. அந்த பாறை அற்புத சக்தி கொண்டதாக இருந்தது. இதனால், அவ்வூரில் யாருமே, தவறு செய்யத் துணிவதில்லை. ஆனால், அவ்வூரில் ராமசாமி பண்ணையார் என்ற ஒருவர் வசித்து வந்தார். அவர் பேராசைக்காரர். அவர் அப்பாவி ஏழை மக்களை கடுமையாக வேலைவாங்கி மிகக் குறைவான ஊதியத்தைக் கொடுத்து வந்தார்.

அவ்வூரில் வெற்றிமாறன் என்ற கல்விமான் ஒருவர் இருந்தார். அவருக்கு பண்ணையாரின் ஏமாற்று வேலை தெரிந்துவிட்டது. அவர் ஊர் மக்களிடம் பண்ணையார் செய்யும் துரோகத்தை பற்றி விளக்கிக் கூறினார். ஊர் மக்களும், பண்ணையாரைப் பற்றி அறிந்துகொண்டனர். ஊர் மக்கள் விழித்துக் கொண்டதை பண்ணையாரும் தெரிந்துகொண்டார். எனவே,அவர் அம்மக்களின் ஊதியப் பணத்தைக் கொடுக்க மறுத்தார். தம்மிடம் பணம் எதுவும் இல்லை என்றும் கூறினார். தமது பணம் முழுவதற்கும் தங்கக் கட்டிகளை வாங்கி ஒரு மூங்கில் தடியில் போட்டு ஊன்றுகோள்போல் பாவித்து வந்தார். ஊர் பெரியவர்கள் பண்ணையாரின் இந்தச் செயலைக் கண்டு அவரை கோவில் பாறைக்கு கொண்டு செல்ல முடிவெடுத்தனர். பண்ணையாரும் அதற்கு உடன்பட்டார்.

அங்கு சென்ற அனைவரும் பண்ணையாரிடம்; "தமது ஊதியப் பணம் எதுவும் தன்னிடம் இல்லை என்று கூற வேண்டும். அப்போதுதான் நாங்கள் நம்புவோம்'' என்று கூறினர். பண்ணையாரும் அதற்கு ஒப்புக் கொண்டு தான் கொண்டு சென்ற மூங்கில் தடியை சற்று நேரம் வைத்திருக்கும்படி வேலைக்காரனிடம் கூறினார். பின்னர், கோவில் பாறையின் முன்னே சென்று "கோவில் பாறையே! ஊர் மக்களின் பணம் எனது பணம் எதுவும் என் கையில் இல்லை!'' என்று கூறினார். தடி அவரிடம் இல்லாததால் கோவில் பாறை அவரை ஒன்றும் செய்யவில்லை. அதனைக் கண்ட மக்கள் அனைவரும் கோவில் பாறைக்கு என்னவாயிற்று அதன் ஆற்றல் நீங்கிவிட்டதா என்று சிந்திக்கலாயினர். மறுகணமே யாரும் எதிர்பார்க்காதபடி கோவில் பாறையின் அருகிலிருந்த புதரிலிருந்து பாம்பு ஒன்று வெளிப்பட்டு பண்ணையாரை நோக்கி ஊர்ந்து வந்தது.

அதைக்கண்ட பண்ணையாரின் வேலைக்காரன், தன் எஜமானரைக் காப்பாற்றுவதற்காக தன் கையிலிருந்த மூங்கில் தடியால் பாம்பை அடிக்க முயற்சித்தான். அதனால், பாம்பு மீண்டும் புதருக்குள் சென்று மறைந்துவிட்டது. நிலத்தில் மோதிய வேகத்தில் உடைந்த மூங்கில் தடியினுள்ளேயிருந்து தங்கக்கட்டிகள் வெளியே வந்து விழுந்தன. பண்ணையாரின் செயல் ஊர் மக்கள் அனைவருக்கும் அம்பலமாகிவிட்டது. அப்போது அவர் அவமானத்தால் கூனிக் குறுகி தான் செய்த தவறை ஒப்புக் கொண்டார்.

# அம்மா சொல்...!

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக்கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண்மூடி, புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான். புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது.

அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்துகொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று அந்த ஆட்டுக்குட்டியை தன் அருகில் அழைக்க வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்துகொண்டிருந்தது. அதைப் பார்த்த ஆட்டுக்குட்டி, "உனக்கு என்ன வேண்டும் ஓநாயே?'' என்று கேட்டது.

ஓநாயும் "அன்பான, இனிய நண்பனே! இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன்! இளம்புல் என்றால் எனக்கு மிகவும் விருப்பம். அதை உண்டு குளிர்ந்த நீரை அருந்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் அந்த பாக்கியம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை...'' என்று வருத்தத்துடன் ஓநாய் கூறியது.



"அப்படியா! நீ புல்தான் உண்பாயா? நீ மாமிசத்தைத்தான் உண்பாய் என்று என் அம்மாவும் அப்பாவும் கூறினார்களே?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டிக் குட்டி. "சேச்சே... அதெல்லாம் சுத்தப் பொய்!'' என்றது ஓநாய்.

"அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டுபேரும் சென்று, அதை உண்போம்'' என்று கூறிவிட்டு ஆட்டுக்குட்டி வேலிக்குள் நுழைந்து ஓநாயின் பக்கமாகச் சென்றது. "உடனே ஓநாய் அதன்மீது பாய்ந்து அதைக் கொன்று உணவாக்கிக் கொண்டது.

அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சைக் கேட்டிருந்தால், ஆட்டுக்குட்டி மதிப்புவாய்ந்த தன் உயிரை இழந்திருக்காது அல்லவா?

# சோழ நாட்டு வீரச் சிறுவன்



சோழ நாட்டை குலோத்துங்கன் என்ற மன்னர் சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தார். இவர்தான் 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்று வரலாற்றில் பேசப்படும் மன்னர். சோழ மரபிற்கு ஒரே ஒரு வாரிசுதான் இந்தக் குலோத்துங்கன். இவரது ஆட்சியில் கல்வியில் சிறந்த புலவர்கள் இவரை நாடிப் பொன்னும் பொருளும் பெற்றுச் சென்றனர். அதேபோல் வீரர்கள் தங்கள் வீரத்தைக் காட்டிப் பரிசுகள் பல பெற்றனர்.

அக்காலத்தில் கடோத்கஜன் என்ற மாளவ நாட்டு மல்லன் ஒருவன் நாடெங்கும் மல்யுத்தம் செய்து வெற்றிக்கொடியை நாட்டி வந்தான். வட இந்தியாவில் பல மல்லர்களை ஜெயித்த அவன் தென்னகத்திற்கும் விஜயம் செய்தான். மற்போரில் மட்டுமல்லாமல், வில்வித்தைகளிலும், வாட்போரிலும் வாகை சூடி வந்தான். அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே வீரர்கள் நடுநடுங்கினர்.

சோழ நாட்டிற்கு வந்த அவன் மன்னன் குலோத்துங்கனைக் கண்டு 'என் சவாலை ஏற்கக் கூடிய வீரர்கள் தங்கள் நாட்டில் உள்ளனரா?'' என்று கேட்டான். அதற்கு மன்னர் சோழநாடு வீரத்தில் என்றும் சோடை போனதில்லை என்று கூறினார். கடோத்கஜனுடன் போரிடுவதற்கு சோழ நாட்டு வீரர்கள் பலர் அரண்மனை மைதானத்தில் ஒன்று திரண்டனர். போட்டியும் ஆரம்பமாயிற்று. முதல்நாள் வாட்போரில் பத்துக்கும் மேற்பட்ட சோழநாட்டு வீரர்கள் அவனிடம் வரிசையாகத் தோற்றனர். அவர்களால் பத்து நிமிடம்கூட தாக்குப்பிடிக்க முடியவில்லை.

மறுநாள் மற்போரில் சோழ நாட்டின் மானத்தைக் காக்க வீரன் ஒருவன் வருவானா என்று மன்னர் ஏங்கிக்கொண்டிருந்தார். கடல் அலையெனத் திரண்டிருந்த கூட்டத்தில் திண்ணிய தோள்களுடனும், வலிமைபொருந்திய கால்களுடனும், தினவெடுத்த கைகளுடனும், அனல்கக்கும் பார்வையுடனும் மிகுந்த வலிமையுடன் காணப்பட்டான் கடோத்கஜன். வீரமுடன் நின்ற அவனை எதிர்க்க யாரும் முன்வரவில்லை.

"மன்னா! உம்மிடம் மலைபோல் படையிருந்தும் என்னை எதிர்க்க எவருமே வரவில்லையே'' என்று கேட்டான் கடோத்கஜன். அவ்வேளையில் "இதோ நானிருக்கின்றேன்'' என்று ஒரு குரல் எழுந்தது. பத்து வயது சிறுவன் ஒருவன் கூட்டத்திலிருந்து வெளியே வந்தான். "ஏய் சிறுவனே, நீயா எனக்கு எதிரி? சிறு பூச்சியை நசுக்குவது போல் நசுக்கிவிடுவேன். உயிர் பிழைக்க வேண்டுமெனில் இங்கிருந்து ஓடிவிடு'' என உரத்த குரலில் கூறினான்.

என்ன ஆச்சரியம்! கண் சிமிட்டும் நேரத்தில் சிறுவன், மல்லனின் தோள்களில் ஏறி அமர்ந்து அவன் கழுத்தில் பலமாகத் தாக்கினான். அவ்வளவுதான்... கடோத்கஜனின் கழுத்து நரம்பொன்று அடிபட்டு கற்சிலையாய் அசைவற்று நின்றான். பின் அவனது இடது காலை வாரி அவனை மண் கௌவச் செய்தான். தோல்வியுற்ற கடோத்கஜன் வெட்கித் தலைகுனிய அவனது ஆணவம் அன்றோடு அழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக் கலை வளர்ச்சி



எல்லாக் கலைத்துறைகளிலும் படிப்படியாக முன்னேறிய ஒரு நாடுதான் சீனா. கன்பூசியஸ், தாவோயிசம் ஆகிய சிந்தனைகள் சீனக் கலையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அவற்றுக்கமைய, சீனக் கலை மரபுகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் சீனக் கலைஞர்கள் வெற்றியடைந்துள்ளனர். அந்த முன்னேற்றம் எவ்வித மாறுதலும் இன்றி பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நிலவியது.





சீனக் கலை மரபுகள் உலகின் எந்த நாட்டுக் கலைக்கும் குறைந்ததாக இருக்கவில்லை. பட்டுத்துணி, கற்பாண்டங்கள், பீங்கான், உற்பத்திகள், யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட செதுக்கல்கள் என்பன இவற்றில் சிறப்பிடம் பெற்றன. சீனர்களின் சமயச் சடங்கு முறைகளில் பித்தளைப் பாத்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. அவை மிருகங்களின் வடிவிலும் பூமியின் செழிப்பை வெளிக்கொண்டு வரும் அடையாளங்களாலும் அலங்கரிக்கப்பட்டன. டாங் அரசர் காலத்தில் சீனக் கலை உயர்நிலையை அடைந்தது. அக்காலத்தில் சீனர்கள் அழகிய, எளிமையான சிற்பங்களையும் நிர்மாணித்தனர். காலம் செல்லச் செல்ல சீன நிர்மாணங்கள் பல்வகைத் தன்மையை அடைந்தன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் நிலவிய டாங் அரச வம்சத்தின் வீழ்ச்சியும் உள்நாட்டுப் போர்களும் இதற்குக் காரணமாயின.

போதிசத்வ வழிபாடு ஆரம்பமாகியதை அடுத்து, சீன சிற்ப மற்றும் ஓவியங்களின் தன்மைகள் மாற்றமடைந்தன. சிலைகளை ஆபரணங்களால் அலங்கரித்தல், மரத்தால் உருவங்களைச் செதுக்கல் என்பன ஆரம்பமாகின. சொங் அரச பரம்பரையின் ஆரம்பத்துடன், பட்டுத் துணியில் சித்திரம் வரையும் முறையும் ஆரம்பமானது. காட்சிகள், மேகத்தால் மூடப்பட்ட மலைகள், ஆறுகள், சிறு வள்ளங்கள் போன்ற இயற்கையுடன் தொடர்புடைய தலைப்புகள் இந்த சித்திர வேலைப்பாட்டில் செல்வாக்குச் செலுத்தின. இக்காலத்தில் சுருள் வடிவான நீண்ட சித்திரங்கள், பட்டுத் துணியால் மூடப்பட்ட ஆபரணப் பெட்டி என்பனவும் நிர்மாணிக்கப்பட்டன. மொகலாயர்களின் ஆக்கிரமிப்புடன் சொங் அரச வம்சம் வீழ்ச்சி அடைந்தது. அதன் பின்னர் வந்த மிங் மற்றும் சிங் அரச வம்ச யுகங்களில் கலையில் புதுயுகம் ஆரம்பமானது. இக்காலத்தில் சித்திரக் கலைஞர்கள் கலைத்துறையில் பொருட்டுப் புது வழிகளை முன்வைத்தனர். அங்கங்கள், அடையாளங்கள் என்பனவற்றைத் தனித்தனியே வெளிப்படுத்தினர். கடதாசி மீது மை தெளித்து அல்லது கையால் தேய்த்து சித்திரங்களை நிர்மாணித்தனர். இது சீனக் கலையின் புதிய திருப்பமாக அமைந்ததுடன், ஐரோப்பியர்களினதும் பாராட்டைப் பெற்றது.

**இரஞ்சித் ஜெயகர்**

# வரலாற்றில் ஒரு நாள்....

கி.மு. 6 ஆம் நூற்றாண்டில், மத்தியதரைக் கடல் வலயத்திற்குட்பட்ட ராச்சியங்களில், செல்வம் கொளிக்கும் ஒரு ராச்சியமாக 'லிடியா' விளங்கியது. லிடியா ராச்சியத்தின் ஆட்சியாளராகத் திகழ்ந்த க்றீசஸ் மன்னன் (கி.மு. 595-547) கலைத்துறையில் அதீத ஆர்வம் கொண்டிருந்தான். ஈசோப் போன்ற பிரபல்யம் பெற்ற பல அறிஞர்கள் மன்னனது அரச சபையில் இருந்தனர். தனது ஆட்சிக்காலத்தில் 'ஆட்சிக் காலம்' (கி.மு.560-547), தனது சொந்தப் பணத்தைக் கொண்டு உலகிற்குப் பெறுமதி வாய்ந்த அற்புதப் படைப்பைப் படைத்திட வேண்டுமென மன்னனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அதற்கமைய, வேட்டையாடலுக்கு அதிபதியான ஆர்ட்டெமிஸ் தேவதைக்காக எஃபெசஸ் தீவில் பெரிய கோயிலொன்றை நிர்மாணித்தார்.






கட்டடத்தின் நடுவில் கூரை இல்லாத நடு முற்றமும் காணப்பட்டது. அதன் ஒரு கோணத்தில் ஆர்ட்டெமிஸ் தேவதையின் சிலை அமைக்கப்பட்டிருந்தது. அழகிய ஓவியங்களாலும் உருவங்களாலும் நிரம்பிய அந்தக் கோயில் அழகாகக் காட்சியளித்தது. கோயிலின் நுழைவாயில், கட்டடத்தின் பக்கவாட்டில் அமைந்திருந்தது. முன் பகுதியில் மிருக பலிக்காக சிறிய அறையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. ஆர்ட்டெமிஸ் கோயில் கி.மு. 546 ஆம் ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் பாரசீகத்தில் சைரஸ் என்ற வலிமை மிக்க மன்னன் தோன்றினான். கி.மு. 550 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அவன், லிடியாவின் எல்லைவரை தனது ராச்சியத்தை பலப்படுத்தி இருந்தான். இந்த ராச்சியத்தின் எல்லையாக விளங்கியது 'ஹேலிஸ்' நதியாகும். நதியின் மறுபக்கத்தில் ஆட்சிக்கு வந்துள்ள மன்னன் குறித்து க்றீசஸ் மன்னன் அச்சம் அடைந்தான்.தனது அரசுக்கு அவனால், ஆபத்து ஏற்படாமலிருக்க வேண்டும் என எண்ணிய க்றீசஸ் மன்னன், அவனுக்கு எதிராகப் போர் தொடுத்தான். இது தன் அழிவைத் தானே தேடிக் கொண்ட செயலாக அமைந்தது. பாரசீகப் படையால், தலைநகர் வரை பின்தொடரப்பட்ட க்றீசஸ் மன்னன், பகைவரால் தோற்கடிக்கப்பட்டதுடன், கி.மு.547 இல் லிடியா உட்பட பரந்த ராச்சியம் முழுவதும் பாரசீக மன்னனின் ஆட்சியின்கீழ் வந்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுச் ச[...] தொடர்புறும்[...]

*அறிவும் தொழில்நுட்பமும் எவ்வளவுதான் வளர்ந்தாலும் மனிதனால் தனக்கான உணவினை தானே தயாரித்துக்கொள்ள முடிவதில்லை. உயிர்வாழ உணவு அவசியமாகும். இந்த உணவே உடலுக்கு உயிர்வாழும் சக்தியை தருகின்றது. உணவு தயாரிக்கும் ஆற்றல் மரம் செடிகளுக்கும் சிலவகை பக்டீரியாக்களுக்கு மட்டுமே உள்ளது. மரம் செடி கொடிகள் தயாரிக்கும் உணவுகள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒவ்வொரு உயிரினங்களும் தங்கியுள்ளன. இதனூடாக சக்தி பரவலாகின்றது.*

## உணவுச் சங்கிலியும் உணவு வலையமைப்பும்

வாழ்க்கை பலதரப்பட்டது. ஒவ்வொரு உயிரினமும் வாழ்வதற்கு உணவு அவசியமாகும். ஓர் வனாந்தரத்தில் உணவு பிரிந்து செல்வதில் ஒரு வரைமுறையினைக் காண முடியும். இங்கு தாவரங்களும், விலங்குகளும் உணவுகளாக மாறுகின்றன. இவ்வாறு உணவினைப் பெறும்போது அந்த உணவுகளில் உள்ள சக்தி ஓர் உயிரினத்தில் இருந்து மற்றொரு உயிரினத்திற்கு உடல் கலங்களினூடாகப் பாய்ந்து செல்கின்றது. இது ஓர் சங்கிலித் தொடர் போன்ற செயற்பாடாகும். இவ்வாறான உணவுச் சங்கிலிகளை சுற்றாடலில் காண முடியும்.

தாவரம், தாவரத்தை உண்பவை, மாமிசத்தை உண்பவை என்றவாறான எளிமையான உணவுச் சங்கிலி முறையினை சுற்றாடலில் காணமுடியும். பொதுவாக உணவுச் சங்கிலிகள் மிக நீளமானதாக அமையமாட்டாது. இவ்வாறான உணவுச் சங்கிலிகள் ஒன்றையொன்று தொடர்புறும்போது உணவு வலையமைப்பு ஒன்று உருவாகின்றது.

### எளிய உணவுச் சங்கிலி




## உயிர்கள் சக்கரம்

உணவுச் சங்கிலி ஒன்றில் ஒவ்வொரு உயிரினங்களுக்கு உரிய உயிரின எண்ணிக்கையில் ஏற்படும் அதிகரிப்பும், குறைவும் உணவுச் சங்கிலிகளில் தொடர்புறும் ஏனைய உயிரினங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் உயிரினங்களின் எண்ணிக்கையினைக் கட்டுப்படுத்திக்கொண்டு உணவுச் சங்கிலியில் சமநிலையைப் பேணும் நடவடிக்கையினை இயற்கை மேற்கொள்கின்றது.

வனாந்தரப்பகுதியில் நன்கு மழைபெய்து உணவுகள் பெருகும்போது, மான்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. மான்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அந்த சுற்றாடலின் சமநிலை பாதிக்கப்படக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இயற்கையாகவே புலிகளின் எண்ணிக்கை (புலிகளின் உணவு அதிகரிப்பதனால்) அதிகரிக்கின்றது. இங்கு மான்கள் புலிகளின் இரையாகுவதனால் மான்களின் எண்ணிக்கை கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது.

## சமநிலை பாதிக்கப்படல்

ஓர் சுற்றாடல் தொகுதியில் இடம்பெறும் புதிய உயிரினங்களின் அறிமுகமும், வெளியேற்றமும் உணவுச் சங்கிலியின் சமநிலையைப் பாதிக்கும் காரணிகளாகிவிடுகின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் ஆபிரிக்காவின் இராட்சத தரைவாழ் நத்தைகள் பசுபிக் தீவு ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு இவற்றுக்கு அதிகளவான உணவுகள் கிடைத்தன. இதனால், அந்த நத்தைகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது. ஓர் உயிரினத்தின் எண்ணிக்கை வளர்ச்சியினால் சுற்றாடல் தொகுதியின் சமநிலையில் பாதிப்பு ஏற்படலாம். அறிமுகம் செய்யப்பட்ட உயிரினம் என்பதால் இந்த நத்தைகளை உட்கொள்ளும் வேறு உயிரினங்களும் அங்கு இருக்கவில்லை.

இதனால், உயிர்ப்பல்வகைமையைக் கட்டுப்படுத்துபவராக இராட்சத தரைவாழ் நத்தைகளின் முட்டைகளை உட்கொள்ளும் வேறு உயிரினம் ஒன்று அத்தீவில் அறிமுகம் செய்யப்பட்டது. அந்த உயிரினம் இராட்சத நத்தைகளின் முட்டைகளை மட்டுமன்றி, அத்தீவுக்கு உரிய Partula என்ற நத்தைகளின் முட்டைகளையும் உட்கொண்டது. இதனால், பசுபிக் தீவுக்கு மட்டும் உரித்தான Partula நத்தை இனம் அழியும் அபாயத்தினை எதிர்கொண்டது.


இராட்சத தரைவாழ் நத்தைகள்


Partula நத்தைகள்

### சவானா புற் பரப்பில் சக்தி பரவும் விதம்

இது சவானா புற்தரையாகும். இங்கு உணவுச் சங்கிலிகள் பலவற்றைக் காண முடியும். இங்கு பலதரப்பட்ட விலங்குகள் பலதரப்பட்ட தாவரங்களையும், விலங்குகளையும் உட்கொள்கின்றன.







## நுண்ணங்கிகள்




பக்டீரியா, பங்கசுகள் என்பன இறந்த உயிரினங்களின் மீதும் அப்புறப்படுத்தப்பட்ட தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் மீதும் தங்கி அவற்றை மக்கிவிட செய்கின்றன. இதன்போது அந்த தாவரங்களும், விலங்குகளின் பகுதிகளும் சிறு சிறு துணிக்கைகளாகப் பிரிந்து அதில் உள்ள போஷாக்குகள் மண்ணுக்குள் அகத்துறிஞ்சப்படுகின்றன. அவ்வாறு மக்கிவிடும் காபன் பதார்த்தங்கள் மண்ணில் சேர்வதால், மண் வளம்பெறுகின்றது. மண்ணில் உள்ள போஷாக்குகளை மரங்களும் தாவரங்களும் உறிஞ்சி எடுத்து வளம்பெறுகின்றன.

தாவர
இலை
நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலியில் உயிரினங்கள்




## உற்பத்தியாளர்கள்/ தயாரிப்பாளர்கள்




சுற்றாடல் தொகுதி ஒன்றில் மரங்களையும் தாவரங்களையும் உணவுத் தயாரிப்பாளர் கள் என்று கூறுவர். இவை சூரிய ஒளியின் சக்தியையும், நீரையும், காபனீரொக்சைட் வாயு வையும் பயன்படுத்தி தாவர இலைகளில் உணவு தயாரிப்பு செயன்முறையில் ஈடுபடுகின்றன.

## நுகர்வோர்/நுகரி

ஒவ்வொரு உயிரினமும் நுகர்வாளராவர். இவை தாவரங் களில் இருந்தும் விலங்குகளில் இருந்தும் பெறப்படும் உயிரிப்பதார்த்தங்களில் தங்கியுள்ளன. இதனால், இவற்றை தாவர மற்றும் விலங்குகள் உற்பத்திகளை உண்பவை அல்லது நுகர்பவை என்று அழைப்பர்.


முயல் (தாவரம் உண்பவை)


புலி (மாமிசம் உண்பவை)

## வளமாக்கிகள் மட்டம்

உணவுச் சங்கிலியில் பல மட்டங்களைக் காணமுடியும். சுற்றாடல் விஞ்ஞானிகள் இந்த அனைத்து மட்டங்களையும் 'வளமாக்கிகள் மட்டம்' என்கின்றனர். இதனை பிரமிட் வடிவில் நாம் முன்வைக்கலாம். விலங்குகள் தமது வளர்ச்சிக்குத் தேவை யான அனைத்து விடயங்களையும் உணவுகள் மூலமே பெறுகின்றன. தமது இனத் தைப் பெருக்க, போஷாக்குத் தேவைக்கு, எதிரிகளிடம் இருந்து பாதுகாப்புப் பெறு வதற்கு சக்தி அவசியமாகும். உணவுகளின்மூலம் சக்தி பெறப்படுகின்றது. இந்த அனைத்து போஷாக்கு மட்டத்திலும் சக்தியின் பகுதி ஒன்று பாதிக்கப்படுகின்றது.

### இரையாக்கி...

உணவுச் சங்கிலியில் உள்ள இரையாக்கிகள் இரட்டை நுகர்வாளர்களை உட்கொள்கின்றன.

### இரட்டை நுகரிகள்

கீரி இரட்டை நுகரியாகும். இவை தாவர உண்ணிகளை இரையாக்கிக்கொண்டு அதில் தங்கியிருக்கின்றன.



### முதல்நிலை உண்ணிகள்

தாவரங்களை உணவாக உட்கொண்டு வாழ்பவை தாவர உண்ணிகளாகும். இவை தாவரத்தை உண்ணும் முதல்நிலை தாவர உண்ணிகளாகும்.

### ஆரம்ப உற்பத்தியாளர்கள்

தாவரங்கள் உற்பத்தி செய்யும் உணவுகளில் சக்தி சேமிக்கப்படுகின்றது. இதனால்தான் இவற்றை ஆரம்ப உற்பத்தியாளர்கள் என்பர். தாவரங்களில் பெருமளவில் சேமிக்கப்பட்டுள்ள சக்தி மட்டம் உணவு சங்கிலியினூடாகப் பரவல் அடைகின்றது. இந்த சக்தி எலிகள், அணில்கள் எண்ணிக்கையை அதிகரிக்க காரணமாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பகுதி - I** (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ..................................................... ..

24) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

பூ விரிகின்றது
மணம் வீசுகின்றது
பூ வாடுகின்றது
இதழ் ....................

1. ஆடுகின்றது 2. பறக்கின்றது 3. விழுகின்றது

25) நாளை சூரியன் உதிக்காவிட்டால் பின்வருவனவற்றுள் எது நடைபெறும்?

1. தொடர்ந்து இருள் காணப்படும்
2. தொடர்ந்து மக்கள் தூங்குவார்கள்
3. மின் விளக்குகளை ஒளிக்கச் செய்து தொழில் புரிவார்கள்

26) தினமும் காலை 7:30 மணிக்கு பாடசாலை ஆரம்பமாகும். இது;

1. பெரும்பாலும் நடைபெறும் 2. எப்போதும் நடைபெறும்
3. ஒருபோதும் நடைபெறுவதில்லை

27) உணவின் மறுபெயர் ஊண். உடம்பின் மறுபெயர்;

1. மெய் 2. ஊன் 3. பொய்

28) 'நட்டாற்றில் விடல்' என்பதன் பொருள்;

1. ஆற்றில் தள்ளிவிடல் 2. ஆபத்தில் கைவிடல்
3. ஆபத்தில் உதவுதல்

29) மீனவனுக்கு கடல் போன்று விளையாடுபவனுக்கு;

1. மைதானம் 3. கடற்கரை 3. புற்தரை

30) 'அதிபர்' என்பது குறித்து நிற்கும் பால்;

1. ஆண்பால் 2. பலர்பால் 3. பொதுப்பால்

31) பின்வருவனவற்றுள் இரவு நேரத்தில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?

1. தாமரை 2. கறிவேப்பிலை 3. அகத்தி

32) நாம் விலங்கு வகையிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆடை வகை எது?

1. பருத்தி 2. பட்டு 3. நைலோன்

33) புளியம் இலையை ஒத்த வடிவைக் கொண்ட இலை;

1. அகத்தி 2. வாகை இலை 3. பொன்னாவரை

34) ஓரிதழைக் கொண்ட பூ;

1. தென்னம்பூ 2. அந்தூரியம் 3. பொப்பி பூ

35) திரள் பழங்கள் வகையில் அடங்கும் பழம் எது?

1. பலாப்பழம் 2. அன்னாசி 3. அன்னமின்னா

36) எந்த இலைவகைகளை உணவில் சேர்ப்பதால் புற்றுநோய் ஏற்படக்கூடும்?

1. சலாது இலை 2. கோவா 3. நம்பை

37) பாதுகாப்பற்ற உணவை உண்பதால் ஏற்படக்கூடிய நோய்;

1. மலேரியா 2. ஒவ்வாமை 3. காய்ச்சல்

38) மஞ்சள் நிற காய்கறிகளில் அடங்கியுள்ள போஷாக்குப் பதார்த்தம்;

1. விற்றமின் A 2. கல்சியம் 3. விற்றமின் C

39) இலங்கையின் மிக நீளமான நதி காணப்படும் இடம்;

1. கண்டி 2. பதுளை 3. காலி

40) பிராணிகளின் உடலில் ஒட்டி வாழும் பிராணி;

1. நுளம்பு 2. அட்டை 3. தெள்ளு

**பகுதி -I விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 2 | 09) 1 | 17) 1 | 25) 1 | 33) 1 |
| 02) 3 | 10) 3 | 18) 1 | 26) 1 | 34) 2 |
| 03) 1 | 11) 1 | 19) 1 | 27) 1 | 35) 3 |
| 04) 1 | 12) 3 | 20) 2 | 28) 2 | 36) 3 |
| 05) 3 | 13) 1 | 21) 1 | 29) 1 | 37) 2 |
| 06) 2 | 14) 1 | 22) 3 | 30) 3 | 38) 1 |
| 07) 2 | 15) 3 | 23) 2 | 31) 3 | 39) 1 |
| 08) 2 | 16) 2 | 24) 3 | 32) 2 | 40) 3 |

# கனவுகளில் பல்வேறு வகைகள்



* அன்றாடம் நாம் பார்க்கும்-கேட்கும் விடயங்கள் எல்லாமே நம் மூளையில் நிரந்தரமாகப் பதிந்துவிடுவதில்லை. ஒருநாளில் நம் மூளையில் பதிவாகும் விடயங்களை தரம் பிரித்து- Edit செய்து- ஒழுங்குபடுத்தி முக்கியமானவற்றை மட்டும் நிரந்தர நினைவில் பதிப்பதுதான் கனவுகளின் வேலை என்கின்றன சில ஆய்வுகள்.

* 'Lucid Dreaming' என்று ஒருவகை கனவு உண்டு. அதாவது, கனவு காண்கிறோம் என தெரிந்துகொண்டே கனவு காண்பதை இது குறிக்கும். இப்படி கனவு காண்பவர்களுக்கு தங்கள் விருப்பம் போல் கனவு காணும் திறமை உண்டு என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். தன் விருப்பம் போல் காட்சிகளையும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் கட்டுப்படுத்தும் விதமான கனவாக இது அடையாளப்படுத்தப்படுகின்றது.

* 'DMT' என்றதொரு வகையும் உண்டு. இதனை 'எதிர்மறை கனவுகள்' என்று கூறலாம். புகைக்கும் பழக்கம் உடைய ஒருவர் அதை விட்டுவிட நினைக்கும்போது, புகைப்பதைத் தூண்டும் விதமான கனவுகள் அடிக்கடி வருதலை இது குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரடிப் பொம்மைகளின் பிறப்பு





**1902** ஆம் ஆண்டு குறித்த ஒரு நாளில் அமெரிக்காவின் ஜனாதிபதியான தியடோர் ரூஸ்வெல்ட் தனது நண்பர்கள் சிலருடன் மிசிசிப்பி பிரதேசத்தில் வேட்டையாடலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். மணித்தியாலங்கள் பல கடந்தபோதிலும் ஒரு விலங்கையேனும் அவர்களால் வேட்டையாட முடியவில்லை. அனைவரும் நம்பிக்கை இழந்துகொண்டிருந்தபோது அப்பாவிக் கரடி ஒன்றை எதிர்பாராத விதமாகக் கண்டுள்ளனர்.

அந்த குழுவில் இருந்த ஒரு வழிகாட்டி, கரடியைக் கொன்றுவிடுவதற்கான அனுமதியை ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டிடம் கோரினார். ஆனால், ஜனாதிபதி அனுமதி அளிக்காததன் காரணமாக கரடி உயிர் தப்பியது. இந்த சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் பரவலாக செய்திகள் வெளியாகின. ஜனாதிபதியின் கருணை உலகம் எங்கும் பரவியது.

இந்த சம்பவத்தினை மையமாகக் கொண்டு அன்று இருந்த பிரபல காட்டூன் கலைஞரான கிளிபர்ட் பெரிமன் என்பவர் காட்டூன் சித்திரமொன்றை வரைந்தார். ஜனாதிபதியினால் கரடி காப்பாற்றப்படுவதே அந்த காட்டூனின் கருவாக அமைந்தது.

புரூக்லீனில் வசித்து வந்த கடை உரிமையாளர் ஒருவர் இந்த காட்டூனால் ஈர்க்கப்பட்டு விளையாட்டுக் கரடிப் பொம்மைகளைத் தயாரித்து தனது கடையில் விற்பனைக்கு வைப்பதற்குத் தீர்மானித்தார். ஜனாதிபதியின் கருணை சம்பவத்தை மையமாகக் கொண்டு உயிர் தப்பிய அந்த கரடியினை நினைவுகூரும் முகமாக டெடிஸ் பெயார் (Teddy's Bear) என்று அக்கரடிக்கு பெயர் சூட்டவும் கடை உரிமையாளருக்கு யோசனை வந்தது. இதற்காக ஜனாதிபதியின் அனுமதியையும் பெற்றுக்கொண்டார். (ஜனாதிபதியின் குடும்பத்தினர் அவரை டெடி என்ற செல்லப்பெயரால் அழைத்தனர்) டெடியின் பெயர் நாளடைவில் டெடி பெயார் ஆக மாறியது. இதுவே பொம்மைக் கரடிகளான டெடி பெயாரின் கதையாகும்.



# பண்டைய கால கடல்வாழ் படிம எச்சம் கண்டுபிடிப்பு

சிறு இறாலின் வடிவத்தினைக் கொண்ட இந்த கடல்வாழ் உயிரினம் 520 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த உயிரினத்தின் இதயமும், இரத்த நாளங்களும் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த கடல்வாழ் உயிரினம் உலகில் இதுவரை இனம் காணப்பட்டுள்ள பண்டைய கால கடல்வாழ் உயிரினமாகக் கருதப்படுகின்றது. சீனாவின் யுனான் பகுதியிலேயே இந்த படிம எச்சம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. லண்டனின் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் படிம எச்சவியல் விஞ்ஞானியான ஷியொயா மா இதுபற்றிக் கூறுகையில்; "இவ்வாறு உள் உறுப்புகள் பாதுகாக்கப்பட்டுள்ள படிம எச்சம் கிடைத்துள்ளமை மிகவும் அரிய நிகழ்வாகும்" என்று சுட்டிக்காட்டியுள்ளார். தற்போது இந்த உயிரினத்தை Funianhuia Protenja என்று பெயரிட்டு அழைக்கின்றனர். ஆதி முள்ளந்தண்டுடியான இதற்கு வெளிப்புற எலும்புத் தொகுதி உள்ளது. உதாரணமாக நண்டு, பூச்சிகள், கூனிகள் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதன் நடுப் பாகத்தில் குழாய் வடிவில் இதயம் அமைந்துள்ளது. இங்கிருந்து கண்கள், மூளைக்கு எடுத்துச் செல்லப்படும் இரத்தக்குழாய்களும் சரியான முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளன. இதன் நீளம் $4^{1/2}$ அங்குலமாகும்.

## வெல்லுங்கள்! விஜய் – TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*23.04.2014* TOP News கேள்விக்கான விடை:
நாய்

Pen Drive வெற்றியாளர்:
எம்.உமார்,
32, குருணாகல்,
அக்குறனை.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(07.05.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

**இவ்வார கூப்பன்:**
07.05.2014

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தொ.பே.இல: ..............................

பாடசாலை: ..............................

தரம்: ..............................

..............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதானி கெப்பட்டிப்பொல கிளர்ச்சித் தலைவனானான்

எஹலப்பொல தனது மைத்துனனாகிய கெப்பட்டிபொல என்பவனை வெல்லஸ்ஸ பகுதிக்கு திசாவையாக்கும்படி ஆள்பதி பிரௌன்றிக்கிடம் வேண்டினான். அவ்வேளை கெப்பட்டிப்பொல ஊவா பிரதேசத்திற்கு திசாவையாக இருந்தான். ஆள்பதி அந்த கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்தினார்.

எனினும், கெப்பட்டிபொல கிளர்ச்சிக்காரர்களால் பிடிக்கப்பட்டுள்ளான் என கூறி அவனது உதவியாளர்கள் திரும்பி வந்தனர். எது எப்படி இருந்தபொழுதிலும் சில தினங்களில் வெல்லஸ்ஸ, பின்தென்ன, உலப்பனை, ஹேவாஹெட்ட, கொத்மலை மற்றும் தும்பறை போன்ற பிரதேசங்களுக்கு பரவிய கிளர்ச்சிகளுக்கு கெப்பட்டிப்பொல தலைவனானான்.

இதற்கிடையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. களனி கங்கை பெருக்கெடுத்து ஓடியது. இதனால், கொழும்பிலிருந்து படை அணிகளை மலையகத்திற்கு அனுப்புவதற்கு அது பெருந்தடையாக இருந்தது. அத்தோடு, மறைந்திருந்து தாக்குதல் நடத்திய கிளர்ச்சியாளர்கள் இராணுவத்தினருக்கு கடுமையான சேதங்களை விளைவித்தனர். இதனால், கிராமவாசிகள் அச்சத்தால் காடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

ஆங்கிலப் படைகள் மறைந்திருந்து தாக்கும் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க முடியாமல் தடுமாறியது. இதனால், அவர்கள் கண்ணில் பட்டதை அழிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். வீடுகளை தீயிட்டுக் கொளுத்தினர். மரங்களையும் கிளைகளையும் வெட்டிச் சாய்த்தனர். இதனைக் கண்ட மக்கள் அச்சமடைந்து, ஆங்கிலேயர் மீது மென்மேலும் குரோதம் கொண்டனர். எனினும், அவற்றை அவர்கள் பொருட்படுத்தவில்லை. கிளர்ச்சி ஏற்பட்ட பிரதேசங்களுக்கு முடிந்தவரை தமது படைகளை அனுப்பினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் மெஜிக் செய்யலாம்

இன்று நாம் கண்களை மயக்கும் ஓர் கண்கட்டி வித்தை மெஜிக்கினை செய்யப்போகின்றோம். இதோ, செய்து பார்க்கலாம். வாருங்கள்.


அங். இல: 5648
ஆர்.அப்துல்லாஹ், புவக்பிடிய, கலேவெல.


அங். இல: 5649
ஜே.எஃப்.சனா, சமீரகம, முந்தல்.


அங். இல: 5650
எம்.ஆர்.ஷிஹாரா, நெடுகுளம் வீதி, புத்தளம்.


அங். இல: 5651
பிலால் அஹமட் தஸுகி, சாவியா வீதி, மஹாகொட,பேருவளை.

## விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5652
எம்.சயான், முகாந்திரம் வீதி, கொழும்பு-12.


அங். இல: 5653
எம்.எச்.ரிசாட், ஹிஜ்ரா நகர், வாழைச்சேனை.


அங். இல: 5654
எம்.அனான், ஹிஜ்ரா நகர், நாவலடி,வாழைச்சேனை.


அங். இல: 5655
டி.பிர்னாஸ், M.P.C.S. வீதி, ஓட்டமாவடி-01

### தேவையான பொருட்கள்:



வெளித்தெரியும் தன்மை கொண்ட கண்ணாடிக் குவளை, நீர், கறுப்பு நிறத்தில் அம்புக்குறி வரையப்பட்ட பேப்பர் துண்டு ஒன்று.

### 1 ஆவது படிமுறை:



அம்புக்குறி கொண்ட பேப்பர் தாளை நடுவில் மடித்து இவ்வாறு வைத்துக்கொள்ளுங்கள். வெற்றுக் குவளையை எடுத்து தாளை சற்று தூர இடைவெளியில் வையுங்கள்.



(அம்புக்குறி கண்ணாடி நடுவில் வருமாறு) தற்போது அந்த அம்புக்குறியினை கண்ணாடிக் குவளையினுள் பாருங்கள். வித்தியாசம் தெரியாது.

### 2 ஆவது படிமுறை:

இப்பொழுது இந்த வெற்றுக் குவளையில் நீர் நிரப்புவோம். நீங்கள் விரும்பினால்



அம்புக்குறித் தாள் அவ்வாறே இருக்குமாறு நீரை நிரப்பலாம். இல்லாவிடின் நீரை நிரப்பிவிட்டுத் தாளை வைக்கவும்.

### 3 ஆவது படிமுறை:



இப்பொழுது மீண்டும் கண்ணாடியினுள் பாருங்கள். தற்போது அம்புக்குறி எதிர்ப்புறம் திரும்பியிருக்கும்; நீரினால் எப்படி அம்புக்குறியை எதிர்ப்புறம் திருப்ப முடிந்தது?

இங்கு மறைப்பதற்கு எதுவுமே இல்லாததினால், நீங்கள் செய்யும் மெஜிக்கை பார்வையாளர்களால் வெளிப்படையாகப் பார்க்க முடியும்.

**ரகசியம்:**

இது ஒரு பார்வை மயக்க மெஜிக் என்று கூறியிருந்தோம். இங்கு நீர் நிரப்பப்பட்ட குவளை தலைகீழ் வில்லையாக மாறுகின்றது. இதனால்தான், அம்புக்குறி எதிர்ப்புறம் திரும்புகின்றது. தாளுக்கும் குவளைக்கும் இடையிலான வேறுபாடு அதிகரிக்கும் அளவுக்கு அம்புக்குறி தெளிவாகத் தெரியும்.

மெஜிக் மாமா

# தெரிந்து கொள்வோம்

* ஹமீத்கர்சாய் என்பவர் ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியாவார். அவ்வாறே, ஹமீத் அன்சாரி என்பவர் யார்?
  இந்தியாவின் உப ஜனாதிபதி; இரண்டாவது முறையும் 2012 இல் இப்பதவிக்குத் தெரிவானார்.



* ஹேமமாலாவும் நந்தகுமாரனும் எனும் புகழ்பெற்ற ஓவியத்தை வரைந்தவர் யார்?
  சோளியஸ் மெண்டிஸ்



* ரோம இலக்கங்களில் குறிக்க முடியாத முக்கியமான எண் எது?
  'O'ஆகும்

* உடல் ஊனமுற்றவர்கள் உலகின் உயர் பதவிகளை வகித்து சாதனை படைத்துள்ளனர். அத்தகைய ஜனாதிபதி ஒருவரைக் கூறமுடியுமா?
  பிரங்ளின் ரூஸ்வெல்ட்



* இலங்கையில் 14 வயதிற்கு குறைந்தவர்களை வேலைகளில் அமர்த்துவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. அந்தவகையில், சிறுவர்களை ஈடுபடுத்தக்கூடாத தொழில்கள் எத்தனை என வரையறுக்கப்பட்டுள்ளது?
  53 தொழில்கள்

* Politics அரசியல் என்ற நூலின் ஆசிரியர் யார்?
  அரிஸ்டோடில்

* சீன ஜனாதிபதியின் பெயர் என்ன?
  ஸி ஜின்பிங்க்



* இலங்கையின் இறுதி ஆளுநர் யார்?
  ஹென்றி மேசன் மூர் (1944-1948)

* 23 ஆவது பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெற்றது. 24 ஆவது மாநாடு எங்கு நடைபெறவுள்ளது?
  மோல்டா



* களப்பு கடல் நீர் ஏரிகளில் வெளிநாட்டவரின் உதவியோடு மேற்கொள்ளப்படும் மீன் வளர்ப்புக்கள் எவை?
  i. இறால்
  ii. சிங்கி இறால்
  iii. நண்டு



தொகுப்பு: உடுவை பரந்தாமன்



படத்தை இங்கே ஒட்டவும்

## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

பாடசாலை: ..............................

வகுப்பு: ..............................

திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுற்றாடலைப் பாதுகா

உலகின் பல நாடுகளில் இருந்தும் பலவிதமான ரசாயனப் பதார்த்தங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த ரசாயனப் பதார்த்தங்கள் காரணமாக ஏற்படும் விபத்துக்கள் ஏராளமாகும். எனவே, இந்த ரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பான முகாமைத்துவம் மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பல சர்வதேச உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டுள்ளன. அவை பற்றிப் பார்ப்போம்.

IPEN International POPs Elimination Network




working together for a toxics-free future



## ரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பிலான உடன்படிக்கைகள்

சில ரசாயனப் பதார்த்தங்களை நாட்டுக்கு நாடு இறக்குமதி/ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன், எந்தவொரு ரசாயனப் பொருளையும் இறக்குமதி/ஏற்றுமதி செய்யும்போது, அந்த ரசாயனம் குறித்து குறிப்பிட்ட நாடுகளை அறிவுறுத்த வேண்டியதும் அவசியமாகும்.

குறிப்பாக, ஆபத்தை விளைவிக்கக்கூடிய ரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் களைக்கொல்லிகள் ஆகியவற்றை எடுத்துச் செல்வது மற்றும் விற்பனை செய்வது தொடர்பில் சர்வதேச ரீதியில் செய்துகொள்ளப்பட்ட பல்வேறு உடன்படிக்கைகள் உள்ளன. ஆபத்து விளைவிக்கக்கூடிய ரசாயனப் பதார்த்தங்களை தேச எல்லைகளைக் கடந்து எடுத்துச்செல்லும்போதும் இந்த உடன்படிக்கைகளின்கீழ் கடும் சட்டதிட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. அவையாவன: பாசல் (BASEL) உடன்படிக்கை, ரொட்டர்டேம் உடன்படிக்கை, ஸ்டொக்ஹோம் உடன்படிக்கை என்பனவாகும்.

## 'உடன்படிக்கை' என்றால் என்ன?

ஏதோவொரு விடயத்தினைக் கருத்திற்கொண்டு சில நாடுகளோ அல்லது சில அமைப்புகளோ அல்லது சில தரப்புகளோ ஓர் உடன்பாட்டுக்கு வருவதனையே இது குறிக்கின்றது. சர்வதேச ரீதியில் ஏற்படும் சிற்சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடன்பாடுகள் எட்டப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகள் ஓரிடத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவர். அதன்போது, எட்டப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப செயற்பட்டு அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இணக்க நாடுகள் உடன்படுகின்றன.

தேச எல்லைகளினூடாக ஆபத்தான கழிவுகளை எடுத்துச் செல்லல், அப்புறப்படுத்தலைக் கட்டுப்படுத்தும்

## பாசல் உடன்படிக்கை

ஆபத்தினை விளைவிக்கக்கூடிய கழிவுகளை நாடுகளின் எல்லைகளினூடாக எடுத்துச் செல்லும்போதும் அப்புறப்படுத்தும்போதும் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கே 'பாசல் உடன்படிக்கை' மேற்கொள்ளப்பட்டுள்ளது. நச்சுப் பதார்த்தங்களை தேச எல்லைகளினூடாக எடுத்துச் செல்லும்போதும் கழிவுகளாக அவற்றை அப்புறப்படுத்தும்போதும் உரிய முகாமைத்துவ திட்டமிடல் வழிகாட்டல்களையும் அதற்குத் தேவையான வசதிகளையும் இந்த உடன்படிக்கை வழங்குகின்றது. இவ்வாறான விடயங்களின்போது, குறை அபிவிருத்தி நாடுகளுக்கு உதவி செய்வதற்கு பாசல் உடன்படிக்கையில் இணைந்துள்ள நாடுகள் முன்வந்து செயலாற்றுகின்றன. இங்கு நச்சுப் பதார்த்தங்கள், நச்சுக் கலந்த வெடி பொருட்கள், கதிர்வீச்சுப் பொருட்கள், இலகுவில் தீப்பற்றக்கூடிய பொருட்கள், ரசாயனக் கழிவுகள் என்பனவற்றை சுற்றாடலுக்கு ஏற்புடைய விதத்தில் முகாமைத்துவம் செய்வதே பாசல் உடன்படிக்கையினூடாக எதிர்பார்க்கப் படுகின்றது.

BASEL CONVENTION

ஆபத்தை விளைவிக்கும் ரசாயனப் பொருட்களை எடுத்துச்செல்வதனைக் கடுமையான முறையில் கட்டுப்படுத்த இந்த உடன்படிக்கையினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டரீதியாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்தும்கூட கடும் சட்ட விதிகளுக்குட்பட்டதாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆபத்தை விளைவிக்கக்கூடிய அனைத்து விதமான ரசாயனப் பொருட்களும் அவை உற்பத்தி செய்யப்படும் இடத்திற்கு அருகாமையிலேயே அப்புறப்படுத்தப்படல் வேண்டும் என்பது குறித்து பாசல் உடன்படிக்கை அதிக கவனம் செலுத்தியுள்ளது.

1989 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 1992 மே 5 ஆம் திகதி முதல் இந்த உடன்படிக்கை அமுலுக்கு வந்தது. இதுவரை 179 நாடுகள் பாசல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. 1992 ஒகஸ்ட் 28 ஆம் திகதி இலங்கையும் பாசல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. இந்த உடன்படிக்கையின்படி, பல ரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள சில ரசாயனப் பொருட்களைக்கூட, இறக்குமதி செய்வதற்கு முன்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முழுமையான அனுமதியைப் பெறல் வேண்டும்.



ஆபத்துமிக்க ரசாயனப் பதார்த்தங்களில், அது பற்றி குறிப்பிடப்படுதல் அத்தியாவசியமான விடயமாகும்.





2008 ஒக்டோபர் மாதத்தில் ரொட்டர்டேம் உடன்படிக்கை நாடுகளின் சந்திப்பு நிகழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாப்பதற்கான உடன்படிக்கைகள்



## ஆபத்துமிக்க ரசாயனப் பொருட்களை முன்னெச்சரிக்கையுடன் விற்பனை செய்ய வழிகாட்டும்

## ரொட்டர்டேம் உடன்படிக்கை

களைக்கொல்லிகள் மற்றும் ஆபத்து விளைவிக்கும் ரசாயனப் பொருட்களை விற்பனை செய்ய முன்னர், அந்த ரசாயனப் பொருட்களின் தன்மைகள் தொடர்பான அறிவுறுத்தல்களின் பின்னர் அவற்றை விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்குவதே ரொட்டர்டேம் உடன்படிக்கையின் பிரதான நோக்கமாகும். நச்சுக் கலந்த ரசாயனப் பொருட்களை சர்வதேச ரீதியில் விற்பனை செய்வதில் இந்த உடன்பாடு பெரிதும் பயன் தருகின்றது. இவ்வாறான நச்சுத்தன்மை கொண்ட ரசாயனப் பொருட்கள் சுற்றாடலுக்கும் மனிதர்களின் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிக்கக்கூடியவையாகும். இந்த பாதிப்புகளில் இருந்து சுற்றாடலையும் மக்களையும் பாதுகாப்பதே இந்த உடன்படிக்கையின்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி நச்சுத் தன்மை கொண்ட ரசாயனங்களை விற்பனை செய்வதில் பங்கேற்கும் இரு தரப்புகளும் ஏதேனும் அசம்பாவிதம் நிகழ்ந்தால் அதன் பாதிப்புகளை சமமாக எதிர்கொண்டு செயலாற்றுவது இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சமாகும்.

இதன்படி, குறித்தவொரு ரசாயனப் பொருளை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்வதற்கு முன்னர், அந்த ரசாயனத்தின் தன்மைகள் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், இவ்வாறான ரசாயனங்களை ஏற்றுமதி/இறக்குமதி செய்யும்போது, உடன்பாட்டுக்கு வருகின்ற நாடுகள் பொது உடன்பாடொன்றுக்கு வர உதவுதல் என்பன இந்த ரொட்டர்டேம் உடன்படிக்கையின் நோக்கங்களாகும். இவ்வாறு நச்சுத்தன்மை கொண்ட ரசாயனங்களை ஏற்றுமதி/இறக்குமதி செய்வது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களை உடன்படிக்கை செய்து கொண்டுள்ள உறுப்பு நாடுகளுக்கு அறிவித்தல், அந்த ரசாயனப் பொருட்களை சுற்றாடலுக்கு ஏற்புடையவாறு பயன்படுத்த உதவுதல் என்பனவும் ரொட்டர்டேம் உடன்படிக்கையினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி அமுலுக்கு வந்த இந்த உடன்படிக்கை, 2006 ஜனவரி 19 ஆம் திகதி முதல் இலங்கையில் அமுலாக்கப்பட்டது.



## மக்கிப்போகாத காபன் கலந்த மாசு காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பினைக் கட்டுப்படுத்தும்

## ஸ்டொக்ஹோம் உடன்படிக்கை

நீண்ட காலத்திற்கு மக்கிப்போகாமல், சுற்றாடலில் காணக்கிடைக்கும் காபன் மாசுகள் பல உள்ளன. இவற்றால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து மனிதர்களையும் சுற்றாடலையும் பாதுகாக்கும் நோக்கிலேயே 'ஸ்டொக்ஹோம் உடன்படிக்கை' உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான ரசாயனப் பொருட்கள் உலகம் முழுவதும் பயன்பாட்டில் உள்ளன. இவை மனிதர்களினதும் விலங்குகளினதும் கொழுப்புக் கலங்களில் சேர்ந்து, மனித ஆரோக்கியத்தையும் சுற்றாடலையும் பாதிக்கின்றன. இதனால், புற்றுநோய் அபாயமும் வளர்ச்சி குறைந்த பிள்ளைகள் பிறப்பும் நிகழ்கின்றன.

இந்த காபன் மாசுகள் நீண்டதூரம் பரவும் தன்மையைக் கொண்டிருப்பதனால், இதனைத் தடுப்பதற்கு அனைத்து மக்களினதும் பங்களிப்பு அவசியமாகும். இந்த காபன் மாசு சுற்றாடலில் பரவுவதைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் என்றே ஸ்டொக்ஹோம் உடன்படிக்கை 2001 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டது. 2004 மே 17 ஆம் திகதி முதல் இந்த உடன்படிக்கை அமுலுக்கு வந்தது. ஆரம்பத்தில் ஸ்டொக்ஹோம் உடன்படிக்கையில் 12 ரசாயனப் பதார்த்தங்கள் பற்றியே குறிப்பிடப்பட்டிருந்ததோடு, 2009 இல் மேலும் பல ரசாயனப் பதார்த்தங்கள் உள்ளடக்கப்பட்டன. 2005 டிசம்பர் 22 ஆம் திகதி இந்த உடன்படிக்கை இலங்கையில் அமுலாக்கம் செய்யப்பட்டது.

-பிரியா


...ட்டர்டேம் ...ப்பு நிகழ்ந்தபோது....



ஆபத்து மிக்க ரசாயனப் பதார்த்தங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள விதம்.


ஆபத்துமிக்க ரசாயனப் பதார்த்தங்கள் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் வேகமான 10

உயிரினங்களின் உலகில் வேகமாக ஓடக்கூடிய மனிதன், வேகமாக ஓடக்கூடிய மிருகம், வேகமாகப் பறக்கக்கூடிய பறவை, வேகமாக நீந்தக்கூடிய மீன் எனப் பலவற்றைப் பற்றி நாம் அறிந்துவைத்துள்ளோம். இவற்றைப் போன்றே உலகில் ஏற்பட்ட தொழில்நுட்ப புரட்சியினை அடுத்து வேகமான வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன பாரியளவில் உற்பத்தி செய்யப்படலாயின. வேகமான ரயில் எனக் கருதப்படும் 'புல்லட் ட்ரெயின்' எண்ணக்கருவின் தோற்றமும் இதன் அடிப்படையிலேயே நிகழ்ந்தது. அவ்வாறே, வேகமாகச் செல்லக்கூடிய விமானங்கள், மோட்டார் கார்கள், கப்பல்கள் எனப் பலவும் அறிமுகப்படுத்தப்பட்டன. அந்தவகையில், மனிதனால் இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள அதி வேகமான மோட்டார் கார்கள், கப்பல்கள், ரயில்கள், விமானங்கள் என்பவற்றில் முதல் 10 இடங்களிலுள்ளவற்றைப் பற்றி இங்கு நோக்குவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்கரம்

## புள்ளிகளை இணைத்து உருவைக் கண்டுபிடிக்க






## படங்களுக்கு ஏற்ற சொற்களுடன் இணைக்க



வழி

மூளை

வலி

ஏறி

எரி

மூலை

# கீழிருந்து மேல்நோக்கிய தொடர்பு

நிறுவனம் ஒன்றின் வெற்றிக்கும், வினைத் திறன் மிக்க தொழிற்பாட்டிற்கும் பணியாளர்சார் தொடர்புகள் முக்கியமாகின்றன. மேல்மட்ட உயர் முகாமைத்துவ ஆளணியினருக்கும் கீழ்மட்ட ஆளணியினருக்கும் இடையில் நெருங்கிய இடைத் தொடர்பு கட்டியெழுப்பப்படுதல் இன்றியமையாதது. கீழ்மட்ட ஆளணியினரின் கருத்துக்களை உயர்மட்ட முகாமைத்துவம் உள்வாங்கக்கூடிய இருவழித்தொடர்பு நிலைகள் வலுப்படுத்தப்படுதல் உயர் முகாமைத்துவத்தை கட்டியெழுப்ப உதவுகின்றது.



நிறுவனம் ஒன்றின் கீழ்நிலை மட்டத்தில் பணிபுரிகின்ற நபர்களின் தகவல்கள், கருத்துக்கள், முன்மொழிவுகள் மேல்மட்ட முகாமைத்துவ ஆளணியினருக்கு பரிமாற்றப்படுகின்ற தொடர்பு முறையே கீழிருந்து மேல்நோக்கிய தகவல் தொடர்பாக காணப்படுகின்றது.

நிறுவனம் ஒன்றில் கீழிருந்து மேல்நோக்கிய தொடர்பு முறைமையை வலுப்படுத்துவதற்கு கலந்துரையாடல்களை ஒழுங்கு படுத்தல், முன்மொழிவுப் பெட்டி வைத்தல், சிறப்புக் குழுக்களை அமைத்தல், வருடாந்தக் கூட்டம், விசாரணைகள்,பிரிவுக் கூட்டங்கள், குறைகேள் அதிகாரி மற்றும் ஆலோசனை சேவையாளரை நியமித்தல் எனும் செயன்முறைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

## குறுக்குத் தொடர்பு அல்லது கிடைத்தொடர்பு

நிறுவனம் ஒன்றில் ஒரே மட்டத்தில் பணிபுரிகின்ற பணியாளர்களிடையே திணைக்களங்களுக்கு இடையே, சம அதிகாரி உள்ள நபர்களிடையே இடம்பெறுகின்ற தொடர்பாடல் செயன்முறை குறுக்குத் தொடர்பாடல் எனப்படும். உதாரணமாக நிறுவனம் ஒன்றில் நிர்வாகப் பிரிவு, செயற்றிட்டப் பிரிவு, கொடுக்கல் வாங்கல் பிரிவு, சந்தைப்படுத்தல் பிரிவு என்பன காணப்படுகின்றபோது இப்பிரிவின் பணிப்பாளர்கள் தமக்கிடையில் கருத்துக்களை பரிமாற்றுகின்ற சந்தர்ப்பத்தை உதாரணமாக சுட்டிக் காட்ட முடியும்.

## ஊடக பாடநெறி 84

நிறுவனம் ஒன்றில் மூன்றில் இரண்டு பகுதியளவில் குறுக்குத் தொடர்பு செயன்முறையே இடம்பெறுகின்றது. தகவல் பரிமாறுதல், பிரச்சினைகளைத் தீர்த்தல், நிறுவன நோக்கங்களை ஒன்றிணைத்தல், நட்புறவு ரீதியான தொடர்பை வலுப்படுத்தல் நிலைகளில் இத்தொடர்பின் வகிபங்கை உணரக்கூடியதாகவுள்ளது.



திணைக்களம் அல்லது துறைகள் பிரிவுகளாக உருவாக்கப்பட்டிருத்தல், பல்வேறு குழுக்கள் உருவாகியிருத்தல், குறுக்குத் தொடர்பை பலவீனமாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமைகின்றன. ஆகவே, நிறுவன அமைப்பின் நேர்த்தியான குறிப்பு தயாரிக்கப்படல், பணியாளர்கள் ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பணிகளை பகிரங்கமாக காட்சிப்படுத்தல், துறைப்பிரிவினருக்கு இடையில் வேலைகளை ஒழுங்கமைத்தல், என்பன குறுக்குத் தொடர்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளாக கொள்ளப்படுகின்றன.

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் ரவி, அப்பா ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**රවි:** **තාත්තේ! ඔයා ලබන සිකුරාදා නිවාඩු ද?**
தாத்தே! ஒயா லபன சிகுராதா நிவாடு த?
ரவி: **அப்பா! நீங்கள் வருகிற வெள்ளிக்கிழமை விடுமுறையா?**

**තාත්තා:** **ඒ ඇයි පුතේ?**
ஏ எய் புதே?
அப்பா: **ஏன் மகன்?**

**රවි:** **ලබන සිකුරාදා අපේ ක්‍රීඩා උත්සවය.**
லபன சிகுராதா அப்பே க்ரீடா உத்சவய.
ரவி: **வருகிற வெள்ளிக்கிழமை எமது விளையாட்டுப் போட்டி.**

**තාත්තා:** **ආ.. ඇත්තද පුතා?**
ஆ... எத்தத புதா?
அப்பா: **ஆ... அப்படியா மகன்?**

**රවි:** **ඔව් තාත්තේ, අම්මයි තාත්තයි එන්න ඕනේ.**
ஒவ் தாத்தே, அம்மய் தாத்தய் என்ன ஓனே.
ரவி: **ஆம் அப்பா, அம்மாவும் அப்பாவும் வர வேண்டும்.**

**තාත්තා:** **කීයට ද පුතා ක්‍රීඩා උත්සවය පැවැත්වෙන්නේ?**
கீயட்ட த புதா க்ரீடா உத்சவய பெவெத்வென்னே?
அப்பா: **எத்தனை மணிக்கு விளையாட்டுப் போட்டி தொடங்குகிறது மகன்?**

**රවි:** **දහවල් එකයි තිහට තාත්තේ.**
தஹவல் எகய் திஹட்ட தாத்தே.
ரவி: **பகல் ஒன்றரை மணிக்கு அப்பா.**

**තාත්තා:** **පුතා මොනවට ද සහභාගි වෙන්නේ?**
புதா மொனவட்ட த சஹபாகி வென்னே?
அப்பா: **மகன் எதில் பங்குபற்றுகிறீர்கள்?**

**රවි:** **මීටර් සිය දුවන්නයි උස පනින්නයි ඉන්නවා තාත්තේ.**
மீற்றர் சீய துவன்னய் உச பனின்னய் இன்னவா தாத்தே.
ரவி: **நூறு மீற்றர் ஓடவும் உயரம் பாய்வதிலும் இருக்கின்றேன் அப்பா.**

**තාත්තා:** **පුතා හොඳට පුහුණුවීම් කළා ද?**
புதா ஹொந்தட்ட புஹுணுவீம் களா த?
அப்பா: **மகன் நன்றாகப் பயிற்சி செய்தீர்களா?**

**රවි:** **ඔව් තාත්තේ, මේ දවස්වල හැමදාම සවසට පුහුණුවීම් කරනවා.**
ஒவ் தாத்தே, மே தவஸ்வல ஹெமதாம சவஸட்ட புஹுணுவீம் கறனவா.
ரவி: **ஆம் அப்பா, இந்த நாட்களில் எந்தநாளும் மாலையில் பயிற்சி செய்கிறேன்.**

**තාත්තා:** **හොඳයි පුතා. ඔයා හොඳට පුහුණුවීම් කරන්න. අපි එදාට එන්නම්.**
ஹொந்தய் புதா. ஒயா ஹொந்தட்ட புஹுணுவீம் கறன்ன. அப்பி எதாட்ட என்னம்.
அப்பா: **நல்லது மகன். நீங்கள் நன்றாகப் பயிற்சி செய்யுங்கள். நாம் அன்றைய தினம் வருவோம்.**

**රවි:** **හොඳයි තාත්තේ.**
ஹொந்தய் தாத்தே.
ரவி: **நல்லது அப்பா.**



### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ලබන ............. නිවාඩු ද?
2. අපේ ක්‍රීඩා .....................
3. හොඳට .............. කරන්න.




இறந்தகால தனி வாக்கியம் (Past Simple Tense) மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் (Present Simple Tense) ஆகிய இரண்டு வகை வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) நான் நேற்று மாலை இங்கே வந்தேன்.
I came here yesterday evening.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஆ) நான் ஒவ்வொரு மாலையும் இங்கே வருகின்றேன்.
I come here every evening.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present Simple Tense)

* I came. நான் வந்தேன். | * I come. நான் வருகின்றேன்.

இ) நீ நேற்றுக் காலை இங்கே வந்தாய்.
You came here yesterday morning.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஈ) நீ ஒவ்வொரு காலையிலும் இங்கே வருகின்றாய்.
You come here every morning.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

* You came. நீ வந்தாய். | * You come. நீ வருகின்றாய்.

உ) நாங்கள் கடந்த ஞாயிறு இங்கே வந்தோம்.
We came here last Sunday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஊ) நாங்கள் ஒவ்வொரு ஞாயிறும் இங்கே வருகின்றோம்.
We come here every Sunday.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

* We came. நாங்கள் வந்தோம். | * We come. நாங்கள் வருகின்றோம்.

எ) அவர்கள் கடந்த இரவு இங்கே வந்தனர்.
They came here last night.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஏ) அவர்கள் ஒவ்வொரு இரவும் இங்கே வருகின்றனர்.
They come here every night.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

* They came. அவர்கள் வந்தனர். | * They come. அவர்கள் வருகின்றனர்.

ஐ) நீங்கள் அனைவரும் நேற்று இங்கே வந்தீர்கள்.
You all came here yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஒ) நீங்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் இங்கே வருகின்றீர்கள்.
You all come here everyday.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

* You all came. நீங்கள் அனைவரும் வந்தீர்கள். | * You all come. நீங்கள் அனைவரும் வருகின்றீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விஜய்' வீதியோர சிறப்பு நிகழ்வுகள்...




'விஜய்' பத்திரிகை, தனது 11 ஆவது வருடத்தில் காலடி வைப்பதையொட்டி கொழும்பு, வெள்ளவத்தையில் நடைபெற்ற வீதியோர சிறப்பு நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட சில புகைப்படங்களை இங்கு காணலாம். ஏராளமான மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் என அனைவரும் இங்கு வருகை தந்தனர். அவர்களுக்கு Rich Life நிறுவனத்தின் 'யோகட்' மற்றும் Nataraj, The Cricket shop நிறுவனங்களின் அன்பளிப்புகளும் இலவசமாக வழங்கப்பட்டதுடன், 'விஜய்' சந்தா பெறுவோருக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரியன் பற்றிய கண்ணோட்டம்

ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களுள் பெரிய நட்சத்திரம் சூரியன் ஆகும். கோள்களைத் தன்னிடம் கவரும் ஈர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ள சூரியன் கோள வடிவான தனது அச்சில் சுழல்கின்றது. ஞாயிற்றுத் தொகுதியானது சூரியனை மையமாகக் கொண்டே நிலைத்துள்ளது. புவியில் இருந்து 149.65 மில்லியன் கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சூரியனது விட்டம் 1.4 மில்லியன் கிலோமீற்றராகும். சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை $6000^0C$ ஆகும். சூரியனின் உட்பகுதியில் உள்ள ஐதரசன் வாயு ஹுலியமாக மாறுவதால், சூரிய வெளிச்சம் உண்டாகிறது. புவியில் ஏற்படும் வேறுபட்ட காலநிலை மாற்றங்கள், உயிரினங்களின் தோற்றங்கள், மனித நடவடிக்கைகள் என்பனவற்றில் சூரியன் பூமியில் தனது செல்வாக்கைச் செலுத்துகின்றது.

ச.ரொஷாந்,
திகோ/கோளாவில் விநா.மகா.வித்., அக்கரைப்பற்று.



# நூல்களை வாசித்து அறிவைப் பெருக்கிடுவோம்

வாசிப்புப் பழக்கமே மனிதனை பூரணத்துவப் படுத்துகின்றது.



கண்டதை கற்பவன் பண்டிதன் ஆவான். படிக்காதவன் அரை மனிதன் ஆவான். சகல சந்தர்ப்பங்களிலும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக எழுதப்பட்டுள்ள சிறந்த புத்தகங்களை வாசிக்க முயற்சி செய்யுங்கள். புத்தகங்கள் உங்கள் அறிவியல் ஆற்றல்களை மேம்படுத்தவும், வெற்றிகரமான வாழ்வை ஏற்படுத்தவும் உதவும். புத்தகங்கள் மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ளும் ஒருவருக்கு உலகில் உயரிய இடம் கிடைப்பதுடன் எச்சந்தர்ப்பத்திலும் அவர் உள ரீதியாகச் சிறைப்படமாட்டார். 'ஒருவரை சிறைப்படுத்தினாலும் அவரது சிந்தனைகளை சிறைப்படுத்த முடியாது.

ஒருவருக்கு நல்ல சிந்தனை ஏற்படுவதற்கு அவர் நல்ல புத்தகங்களை வாசிக்கவேண்டும். 'புத்தகங்களை வாசிப்பது மூளைக்கு சிறந்த பயிற்சியாகும்' புத்தகங்கள் வாசிப்பதன்மூலம் நுண்ணறிவையும் வளர்த்துக்கொள்ளலாம்.



நல்ல நல்ல நூல்களை நாடி நாமும் கற்பதன்மூலம் உலகில் சிறந்த பிரஜையாக வரலாம். வாழ்வை வெற்றிகொள்ள வேண்டுமாயின் வாசியுங்கள்.... வாழ்வை வெற்றிகொள்ளுங்கள். புத்தகங்களை வாசித்திடுவோம் எழுத்தறிவை வளர்த்திடுவோம்.

வி.தர்சனா,
கா/திவித்துறை த.க.வித்தியாலயம்.

# உலகில் மிகச் சிறிய பறவை



உலகிலேயே மிகச் சிறிய பறவை கியூபா நாட்டில் உள்ள 'மெல்ஸிகா ஹெலனே' என்ற தேன் சிட்டாகும். இப்பறவையின் எடை 2 கிரம்தான். அலகு முதல் வால்வரை அதன் நீளம் 2 அங்குலம் ஆகும். பெண் பறவையை விட ஆண் பறவை கால் அங்குலம் சிறியது. இதன்படி பார்த்தால் இதுதான் உலகின் மிகச் சிறிய பறவை இனமாகும்.

இப்பறவை ஒரு விநாடிக்கு 80 தடவைகள் தனது இறக்கைகளை அடிக்கின்றது. அப்போது 'வீர் வீர்' என்ற சப்தம் கேட்கும். ஆண் பறவையும் பெண் பறவையும் தனித்தனியே பறக்கும்.இவற்றின் இனச் சேர்க்கை சில விநாடிகளில் முடிந்துவிடும். இவற்றின் கூடு சிலந்தியின் வலைகளைப் போன்று சிறியதாகவே காணப்படும். எப்போதும் இவை சுறுசுறுப்பாக இருப்பதால் இப்பறவைகளுக்கு உணவு தொடராகவே தேவைப்படுகின்றது. இவற்றின் உணவு சிலந்திகளும், ஈக்களும் தான். ஆனால், இவற்றிற்கு மிகவும் பிடித்த உணவு பூக்களில் உள்ள தேன்தான். எனவே, தேன் உள்ள மலர்களைத் தேடி இவை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் சளைக்காமல் பறக்கும். மேலும் இவை பலவகை நிறங்களுடன் காணப்படுகின்றன.

ஏ.எல்.நஜீம்தீன்,
மர்கஸ் அந்நூர் அரபிக் பாட.,
வாழைச்சேனை.



# குயில்

குயிலே குயிலே
கூவுகிறாய்
கூட்டை நீயும் தேடுகிறாய்
இருண்ட நிறத்தில் இருந்தாலும்
இனிய குரலால் பாடுகின்றாய்!

கணினியுகத்தில் வாழ்ந்தாலும்
கூடு கட்டத் தெரியவில்லை
காகக் கூட்டைத் தேடுகிறாய்
காரணம் ஏனோ கூறாயோ!

முட்டை இரண்டும் ஒன்றென்று
உணர உனக்குத் தெரியுமென்றால்
முட்டை அடை காத்திடுவாய்
முறையாய் குஞ்சு பொரித்திடவே!
ஏனோ தயக்கம் கொள்கின்றாய்
குயிலே குயிலே கூறாயோ
காரணம்தான் நீ கூறாயோ....!

றுவைதா மதீன்,
பிறுவாங்கொட.

# வானொலி ஒலிபரப்பு

தகவல் பரிமாற்றத்திற்குப் பெரிதும் உதவும் தொடர்புசாதனங்களுள் வானொலி முக்கிய இடத்தை வகிக்கின்றது. இன்று வானொலி இல்லாத வீடுகளே இல்லை என்று கூறும் அளவிற்கு வானொலியின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

வானொலி மூலம் செய்திகளை மட்டுமன்றிப் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் நாம் அறிந்துகொள்ளலாம். வானொலியை இத்தாலி நாட்டவரான மார்க்கோணி 1896 இல் கண்டுபிடித்தார். இன்று வானொலிகள் பல்வேறு வகையில் பல்வேறு வடிவங்களில் உருவாக்கப்படுகின்றன.

உலகம் முழுவதும் பல்வேறு வானொலி நிலையங்கள் உள்ளன. அவற்றின் மூலம் உலகில் நிகழும் நிகழ்வுகளை உடனுக்குடன் நாம் அறிந்துகொள்ள முடியும். எமது நாட்டில் அரசாங்க மற்றும் தனியார் வானொலிகள் பல உள்ளன. இவை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன.



ஜெ.கருஷ்ணா,
கமு/கார்மேல் பற்றிமா தே.பாட., கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 84



**மேலிருந்து கீழ்**

01. திருடன்-எதிர்ப்பாற் சொல்.
02. இந்த காலத்தில் வெயில் அதிகம்.
03. வயலும் வயல் சார்ந்த இடமும்.
05. கோடு-ஒத்தகருத்துச் சொல்.
06. 'அரை' என்றும் அர்த்தப்படும்.
07. அந்தம்-எதிர்ப்பதம். (தலைகீழ்)
08. தினம்.

**இடமிருந்து வலம்**

01. இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள ஓர் இடம்.
04. ஒரு ரூபாயின் நூறில் ஒரு பங்கு.
07. விளக்கு எரிய எண்ணெய்யுடன் இதுவும் தேவை. (மாறியுள்ளது)
09. ஒருவகைத் தானியம்.
10. வாழ்நாள்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 83 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 உ | ப் | 2 ப | ரி | 3 கை | |
| ற | | வ | | 4 மா | லை |
| க் | | ள | | று | 5 சோ |
| 6 க | ரு | ம் | 7 பு | | |
| ம் | | | ற் | | ளி |
| | ர் | யி | று | ற் | 8 கு |




'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 14.05.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 23
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

**பரிசுப் பொதி**

1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

Sponsored by

NATARAJ

Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

**1** அடுத்து வர வேண்டிய பூவின் நிறம் யாது? நிறந்தீட்டிக் காட்டுக.



**3** கடிகாரம் குறித்து நிற்கும் நேரத்தை எழுதுக.



**2** A படத்தை நன்கு அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக.




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 21 விடைகள்

போட்டி: 01



போட்டி: 02



போட்டி: 03



## நடராஜ் அறிவுக்த விருந்து - 21 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
இ.வைஷ்ணவன், திருநெல்வேலி.

**2ஆம் பரிசு**
எஃப்.சாமியா, திப்பிடிய.

**3ஆம் பரிசு**
ஞா.கிஷான், கொழும்பு-10.

**பாராட்டுப் பெறுவோர்:**

* த.மோஷிக்கா, புதிய கல்லடி.
* ஹிமாஸ் நஸீம், திக்குவல்லை.
* கு.அகிலேஷன், அரியாலை.
* எச்.நாதியா, மல்வானை.
* த.பாரதிகிருஷ்ணா, பண்ணாகம்.
* வை.தஹானி, ஹம்பராவ.
* சு.தரண்யா, கோண்டாவில்.
* ருதான் ருதைன், கல்பொக்க.
* எஃப்.பரீஹா, காத்தான்குடி.
* ஆர்.செனுரி, பல்லேகெல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

நிக்கவரெட்டிய கல்வி வலய விளையாட்டுப் போட்டிகளில் கீழ்பிரிவு மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டிகளில் வெற்றிக் கிண்ணத்தை பன்னவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய கிரிக்கெட் அணி சுவீகரித்தது. வலய கிண்ணத்தை வெற்றிகொண்டு மாகாண மட்ட போட்டிகளுக்கு தகுதியைப் பெற்ற இந்த அணியினரையும் வித்தியாலயத்தின் அதிபர் கே.எம்.ஜெலால்தீன், பிரதி அதிபர் எம்.ஹஸிம், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் எம்.பஸீர், எல்.பாஹிர், எம்.சஜீர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

*(படமும் தகவலும்: கொப்பேகனே நிமல் பிரேமச்சந்திர)*

# பார் டெயில்ட் காட்விட் எனும் அதிசயப் பறவை



உலகில் பார்-டெயில்ட் காட்விட் (bar tailed godwit) எனும் அதிசயப் பறவை இனம் ஒன்று வாழ்கின்றது. இதன் செயற்பாடுகள் மூக்கின்மேல் விரலை வைக்கும் அளவுக்கு அதிசயமானது. சுமார் 11,000 கிலோ மீற்றர் (7000 மைல்) தூரத்தை, ஏறக்குறைய எட்டு நாட்களில் இடைவிடாமல் மிக இலகுவாகவே பறந்து கடந்துவிடுகின்றது. இப்பறவைகள் பகலில் சூரியனை அடையாளம் வைத்தும் இரவில் நட்சத்திரங்களை அடையாளம் வைத்தும் பறக்கின்றன. தாம் பறக்கும் திசைகளில் கடுங்காற்று வீச இருப்பின் அதை மிக இலகுவாகவே இப்பறவைகள் அறிந்துவிடுகின்றன. காற்றின் அழுத்த நிலைகளையும்



தனக்குச் சாதகமாகவே பயன்படுத்திக்கொள்கின்றன.

இப்பறவைகள் நீண்ட நாட்கள் பறப்பதற்குரிய உடற் சக்தியை தனது உடலில் மிகவும் அதிசயிக்கத்தக்க வகையில் சேமித்து வைத்தும் கொள்கின்றன. வெள்ளை மற்றும் சாம்பல் நிறத்துடன் காணப்படும் இப்பறவை, நீளமான அலகையும் தன்னகம் கொண்டுள்ளது. மிக நீண்ட இறக்கைகளைக் கொண்டுள்ள இந்த அதிசயப் பறவை எவ்வாறு நீண்ட






தூரம் பறக்கின்றது எனும் இரகசியத்தை இன்றுவரை அறிய முடியாது ஆய்வாளர்கள் திணறுகின்றனர். எனினும் மிக நீண்ட தூரத்தை இடைவிடாமல் பறக்கும் பறவை இதுவே என்று ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது.

## பண்பாகப் பேச...

எமது எண்ணங்களே வார்த்தைகளாக உருவெடுக்கின்றன. நல்ல விடயங்களை சிந்திக்கும்போதுதான் நல்ல வார்த்தைகளைப் பேச முடியும். எந்தவொரு மனிதனாலும் தனது பேச்சை முழுவதுமாகக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுவதால் தான் பேசும் வார்த்தைகள் ஒவ்வொன்றினையும் குறித்து மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அந்தவகையில், எமது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் வார்த்தைகள் குறித்து அலசி ஆராய்வது அவசியமாகின்றது.

இவ்வாறே ஆசிரியர்கள், பெரியவர்கள், பெற்றோர்கள், நண்பர்கள் ஏன் நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு நபரிடமும் உரையாடும்போது மரியாதையுடனும் நாகரிகமாகவும் சாந்தமாகவும் அன்பாகவும் உரையாடுவது சிறப்பானதாகும். இவ்வகையான சிறப்பான உரையாடல்களே உங்கள் மீது ஏனையவர்கள் மரியாதையையும் நம்பிக்கைகளையும் வைப்பதற்கு ஏதுவாகின்றது. இதற்கமைய நல்ல நடத்தைகளையும் சிந்தனைகளையும் கொண்ட மாணவன் ஒருவன் வெகு சிறப்பான உரையாடல்களை மேற்கொள்ளக்கூடியவனாக இருக்கின்றான்.

நாம் பார்க்கின்ற, படிக்கின்ற விடயங்கள் எமது எண்ணத்தில் அதிகளவு செல்வாக்குச் செலுத்துவதால், தீமையான எண்ணங்களையும் பேச்சுக்களையும் களைந்து எறிந்துவிட வேண்டும். சிந்தனையற்ற அதிகமான பேச்சுக்களைத் தவிர்த்து சரியான வழியில் உரையாடுவதே மாணவர்களின் எதிர்காலத்திற்கு மிகச் சிறப்பாக அமையும் என்று கூறலாம்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



யோ.ஜென்சி,
புனித கிளேயர் கல்.,
கொழும்பு-06.



டேவிட் சஞ்சைராஜ்,
மயிலணி சைவ மகா வித்.,
யாழ்ப்பாணம்.



க.சாமந்தி,
யா/வடமராட்சி இந்து ம.கல்.,
வடமராட்சி.



ஆர்.ஜனனி பிரியங்கா,
ஹோலிறோசரி த.ம.வித்.,
பொகவந்தலாவ.



எஃப்.உமைமா,
தெலம்புகல்ல, தொடன்கஸ்லந்த.



எஸ்.சஞ்சீவன்,
ஊவா ஹைலண்ட்ஸ் த.ம.வித்.,
பண்டாரவளை.



ஞா.சுபஸ்திகன்,
கோப்பாய் நாவலர் தமிழ் வித்.,
கோப்பாய்.



ஜெ.ஸ்டெப்பான்,
புனித அந்தோனியார் ஆ.கல்.,
கொழும்பு-13.



க.சேனுஜா,
சாவகச்சேரி இந்துக் கல்.,
சாவகச்சேரி.



எஃப்.பஸ்னா,
ஹமீதியா மு.ம.வித்., கும்பலங்க.



மொஹமட் பஸாயர்,
இக்கிரிகொள்ளாவ மு.ம.வித்.,
அநுராதபுரம்.



மின்ஹா மபாஸ்,
அக்குறனை மு.பா.வித்.,
அக்குறனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானில் இருந்து மின்சாரம் தரும் 'வெளவால்'



அல்ட்டிரோஸ் நிறுவனத்தின் புதிய தயாரிப்பான 'பெட்' மேல் வானில் காற்றினை ஈர்த்து மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது.



வெளவால் என்று குறிப்பிடப்பட்டாலும் இது உண்மையில் வெளவால் அல்ல. இது ஓர் பறக்கும் காற்றாடியாகும். எதிர்காலத்தில் இந்த மிதக்கும் காற்றாடியில் இருந்து எமது வீடுகளுக்கு மின்சாரம் கிடைக்கும். இன்று ஒவ்வொரு இடங்களிலும் காணக்கிடைக்கும் நடமாடும் தொலைபேசி கோபுரங்களைப் போன்று இந்த இராட்சத மிதக்கும் காற்றாடிகளை எதிர்காலத்தில் உங்களால் எங்கும் காண முடியும்.

அமெரிக்காவின் மச்சூசட்ஸ் பகுதியில் அமைந்துள்ள 'எல்ட்டிரோஸ் எனர்ஜீஸ்' (Altaeros Energies) நிறுவனம் அலஸ்கா எரிசக்தி அதிகார சபையுடன் இணைந்து இந்த மின்சக்தி விநியோக தொகுதியை அண்மையில் அலஸ்காவில் அறிமுகப்படுத்தியது. இதனை 'பயோயன்ட் எயாபோன் டர்பைன்' (Buoyant Airborne Turbine) அதாவது BAT என்ற (வெளவால்) சுருக்கப் பெயரால் அழைக்கின்றனர்.

காற்றின் சக்தியினால் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பிறப்பாக்கியே இதில் உள்ளது. இதனை 1000 அடி உயரத்தில் அதாவது 305 மீற்றர் உயரத்தில் நிலை நிறுத்துவர். வானில் அந்த உயரப் பரப்பில் காற்றின் வேகம் அதிகமாகும். இந்த முறையினைப் பயன்படுத்துவதனால், மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செலவினை 65 வீதமாகக் குறைக்க முடியும் என்று உற்பத்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

## மிதக்கும் மின் உற்பத்திக் காற்றாடி எப்படி இயங்குகின்றது?

'பெட்' (BAT) எனப்படும் மிதக்கும் மின் உற்பத்திக் காற்றாடி 1000 அடி (305 மீற்றர்) உயர வான் பரப்பில் மிதக்க விடப்படும். இந்த காற்றாடியினை இயக்குவதற்கு அந்தளவு உயரம் போதுமானதாகும். அந்த காற்றின் வேகமும் குறைவடைய மாட்டாது.

இந்த வான் உயரத்தில் காணப்படும் காற்றின் வேகமானது சாதாரண உயர சுழற் காற்றாடிகளுக்கு கிடைக்கும் காற்றின் வேகத்தை விட 5 முதல் 8 மடங்கு அதிகம் என்று 'அல்ட்டிரோஸ்' நிறுவனம் கூறுகின்றது. வேறு முறைகளில் மின்சாரத்தை விநியோகிக்க செலவாகும் பணத்தில் இப் புதிய முறையினூடாக 65 சதவீதத்தை மிச்சப்படுத்த முடியும். பொருத்துவதற்கு அதிக நேரமும் தேவைப்படாது. இதற்கென ஹீலியம் நிரப்பப்பட்ட இராட்சத சக்கரம் போன்ற கட்டமைப்பு பயன்படுத்தப்படுகின்றது.

நிலத்துடன் பொருத்தப்படும் அதி சக்தி வாய்ந்த சங்கிலிகளினால் இதனை வானத்தில் நிலைநிறுத்த முடியும். இந்த கம்பிகளினூடாக காற்றாடியிலிருந்து உற்பத்தியாகும் மின்சக்தி கீழே விநியோகிக்கப்படுகின்றது. ஒரோஸ்டெட் நிறுவனம் தயாரித்துள்ள வானில் மிதக்கும் பலூன் உற்பத்தி தொழில்நுட்பமே இந்த 'பெட்' தொகுதியை தூக்கி நிலைநிறுத்தப் பயன்படுத்தப்படுகின்றது.

தூரப்பகுதிகளுக்கு கம்பிகளினூடாக மின்சாரத்தை விநியோகிக்க ஏற்படும் செலவினத்தைக் குறைப்பதற்காகவே அல்ட்டிரோஸ் இந்த 'பெட்' திட்டத்தை திட்டமிட்டுள்ளது. இந்த முறையானது தொலைவில் உள்ள தீவுகளுக்கும் எண்ணெய், எரிவாயு அகழ்வுப்பணி இடம்பெறும் இடங்களுக்கும், நகரத்திலிருந்து தூரப்பகுதிகளில் அமைந்துள்ள விவசாயப் பண்ணைகளுக்கும், தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கும், இடர் முகாமைத்துவ அமைப்புகளுக்கும், இராணுவ முகாம்களுக்கும் மிகவும் பொருத்தமான பயன்தரக்கூடிய திட்டமாக உள்ளது.

இத் தொழில்நுட்பத்தினை சந்தைக்கு அறிமுகப்படுத்திய முதல் நிகழ்வாக அலஸ்கா நிகழ்ச்சித் திட்டத்தினைக் குறிப்பிட முடியும். இதில் கிடைக்கும் அனுபவத்தினூடாக இத்திட்டத்தை மேலும் மெருகேற்றி விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த மிதக்கும் காற்றாடி சுற்றாடலில் பாதிப்பினை ஏற்படுத்த மாட்டாது, சத்தமும் ஏற்படாது.

'பல தசாப்தங்களாக சுழற்காற்றாடிகளை நிறுவ பெரிய தூக்கிகள் தேவைப்பட்டன. இதற்கு பல வாரங்கள் தேவைப்பட்டன. நேர காலத்திற்கு ஏற்ப போதுமான காற்று வீசுவதும் இல்லை. இந்த புதிய முறையில் இப்பிரச்சினைகள் எதுவுமே இல்லை' என்று அல்ட்டிரோஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி பென் க்ளாஸ் கூறுகின்றார்.

இதற்கு டீசல் மின் பிறப்பாக்கிகள் போன்று எரிபொருளும் தேவைப்பட மாட்டாது. தரை மட்டத்தில் காற்று குறைவான பகுதிகளிலும் இந்தமுறை சிறந்த மாற்றுத் தீர்வாகவே அமையும் எனலாம்.



தற்போது உலகம் முழுவதும் உள்ள இந்த சுழற்காற்றாடிக் கம்பங்களை விட இந்த புதிய முறையை இலாபகரமானதாக மாற்ற நிறுவனம் எதிர்பார்க்கின்றது.



எதிர்காலத்தில் டீசல் மின் பிறப்பாக்கி இயந்திரத்துக்குப் பதிலாக இந்த 'வெளவால்களை' வானில் காண முடியும்.

'பெட்' எனப்படும் வெளவால் மேல் வான்பரப்பில் நிலைநிறுத்தப்பட்டுள்ள விதம் 'ஹீலியம்' நிரப்பப்பட்ட இந்த கட்டமைப்பினுள் உள்ள காற்றாடியினாலும் மின் பிறப்பாக்கி கருவியினாலும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தரையுடன் பொருத்தப்படும் கம்பிகளினூடாக பெறப்படும்.

'எல்ட்டிரோஸ் எனர்ஜிஸ்' நிறுவனம் அலஸ்கா எரிசக்தி அதிகார சபையுடன் இணைந்து இந்த 'பெட் எனப்படும் புதிய மின்சார விநியோக தொகுதியை அலஸ்கா பகுதியில் அறிமுகம் செய்துள்ளது. ஆயிரம் அடி உயர வான் பரப்பில் இது நிலைநிறுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சாரணர் அமைப்பு இயங்கும் பணிமனைகள்


பிராந்தியங்களை குறித்துக் காட்டும் உலக வரைபடம்

உலக சாரணர் அமைப்பின் தலைமையகம் ஜெனீவாவில் இயங்கி வருகின்றது. இந்த அமைப்பு தனது பணிமனைகளை ஆறு பிராந்தியங்களாகப் பிரித்து தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றது. அவை ஆபிரிக்கப் பிராந்தியம் (கென்யா), அரேபியப் பிராந்தியம் (எகிப்து), ஆசிய பசுபிக் பிராந்தியம் (பிலிப்பைன்ஸ்), ஐரோப்பிய பிராந்தியம் (சுவிட்ஸர்லாந்து), இடை அமெரிக்கப் பிராந்தியம் (கொன்ராறிக்கா), யுரேசியப் பிராந்தியம் (ரஷ்யா) என்பனவே குறித்த பிராந்தியங்களாகும்.

## பிராந்தியங்களும் குறியீட்டுச் சின்னங்களும்....

- European Region - ஐரோப்பிய பிராந்திய குறியீட்டுச் சின்னம்
- Arab Region - அரேபியப் பிராந்திய குறியீட்டுச் சின்னம்
- Africa Region - ஆபிரிக்கப் பிராந்திய குறியீட்டுச் சின்னம்
- Asia-Pacific Region - ஆசிய பசுபிக் பிராந்திய குறியீட்டுச் சின்னம்
- Interamerican Region - இடை அமெரிக்கப் பிராந்திய குறியீட்டுச் சின்னம்
- Eurasian Region - யுரேசியப் பிராந்திய குறியீட்டுச் சின்னம்

# சாரணர் ஆலோசனை

சாரணர் குழுவில் பயன்படுத்த வேண்டிய முக்கிய ஆவணங்கள்

ஒரு பாடசாலை சாரணர் குழுவின் வெற்றி அந்தப் பாடசாலையின் அதிபரில் தங்கியுள்ளது. சாரணர் குழுக்களை நடத்துவதையும் அவர்களைக் கொண்டு பாடசாலையின் பல்வேறு வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதை விடுத்து



அவர்களின் முன்னேற்றங்கள் எவை அதற்கு என்ன பங்களிப்புச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் சகலரிடமும் அண்மைக் காலமாக ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இதையிட்டு கல்வி அமைச்சு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. பாடசாலையில் சாரணர் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு சாரணர்களின் பயிற்சிப் பொருட்களைப் பாதுகாக்க ஒரு சாரணர் அறை அத்துடன் அலுமாரி என்பவற்றை ஒவ்வொரு பாடசாலையிலும் பிரத்தியேகமாக ஒதுக்கிக்கொள்வது பயனுடையது. மேலும் பின்வரும் விடயங்களும் முக்கியமானதாகும்.



- ✱ சாரணர் பெயர் பட்டியல் காட்சிப்படுத்தல் (அவர்களுடைய விபரங்கள் அனைத்தும் உள்ளடங்குதல் வேண்டும்)
- ✱ வரவு இடாப்பு
- ✱ குறிப்புப் புத்தகம்
- ✱ விருந்தினர் அறிக்கைப் புத்தகம்
- ✱ முன்னேற்ற அறிக்கைப் புத்தகம்
- ✱ கூட்ட அறிக்கைப் புத்தகம்
- ✱ கணக்கு விபரப் புத்தகம்
- ✱ இருப்பு விபரப் புத்தகம்
- ✱ சேவைகள் தொடர்பான புத்தகம் மற்றும் ஆவணங்கள்
- ✱ சமூகசேவை அறிக்கைப் புத்தகம்
- ✱ சாரணர் கைநூல்கள்
- ✱ சாரணர் பாடல் நூல்கள்
- ✱ படங்கள்
- ✱ பயிற்சிப் பொருட்கள்
- ✱ கூடாரங்கள்
- ✱ சமையல் பாத்திரங்கள்
- ✱ கடிதங்கள் தொடர்பான கோவைகள்

இவற்றுடன் அணிகளுடைய ஆவணங்கள் என்பன முக்கியமாகப் பயன்படுத்துதல் வேண்டும். சாரணர் இலக்கை அடைய வேண்டுமானால், இந்த மாதிரியான ஆவணங்கள் கண்டிப்பாக பேணப்படல் வேண்டும்.

(அறிவுரை தொடரும்...)

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர்கள் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| காங்கோ ஜனநாயக குடியரசு | 71,443 | 1963 | 1924 |

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

**அடுத்த வாரம் வருவது...**
பாத்திரம் இன்றி எப்படி சமையல் செய்வது?




உலக சாரணர் இயக்க அமைப்பின், உலகளாவிய ஆதரவு குழுக் கூட்டம், இலங்கையில் மாரளலவில் அமைந்துள்ள Hotel Blub Palm Bay யில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றது. அது தொடர்பான சில புகைப்படங்களை இங்கு காணலாம்.







## கிளிநொச்சி சாரணர் மாவட்டத்தின் அறிவிப்பு

### அணித்தலைவர் பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு

அணித்தலைவர் பயிற்சிக்கான அணித்தலைவர்கள், உதவி அணித்தலைவர்கள் அனைவருக்குமான நேர்முகத்தேர்வு கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெறும் என்று கிளிநொச்சி சாரணர் மாவட்டம் அறிவித்துள்ளது.

### கிளிநொச்சி மாவட்ட சாரணர் தலைவர்கள் சபைக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட சாரணர் தலைவர்கள் சபைக் கூட்டம் மே மாதம் 11 ஆம் திகதி பி.ப 2:30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. கிளிநொச்சி, தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் சாரணர் குழுக்களின் சாரணர் தலைவர்களும் குருளைச் சாரணர் தலைவர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். தயவுசெய்து கீழ்காணும் முறையில் ஆசிரியர்களை தெரிவுசெய்து இக்கூட்டத்தில் பங்குபற்றச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கீழ் காணப்படும் வயது அடிப்படையில் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளச் செய்யலாம்.

குருளை சாரணர்: ஆண், பெண் (வயது 7-11 வரை)

குருளை சாரணர் தலைவர்: ஆண், பெண் (வயது 11-18 வரை)

சாரணர் தலைவர்: வயது 18-25 வரை

திரிசாரணர்: ஆண், பெண் இருபாலாரும். (வயது 18-25 வரை)

முக்கிய குறிப்பு: சாரணர் தலைவர், குருளைச் சாரணர் தலைவர் என்னும் பதவி ஆசிரியர்களையே குறிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Stop Killing Whales

## விஞ்ஞான ஆய்வுகள் என்ற போர்வையில் ஜப்பானியர்களின்

# திமிங்கில வேட்டை

ஜப்பானியர்களினால் அன்ட்டாட்டிக்காவில் மேற்கொள்ளப்படும் திமிங்கில வேட்டை விஞ்ஞான ஆய்வுக்காக மேற்கொள்ளப்படுவது அல்ல என்று நீதிக்கான ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றம் கடந்தவாரம் அறிவித்துள்ளது. ஜப்பானில் இந்த திமிங்கில வேட்டை நிகழ்ச்சித் திட்டத்திற்கு எதிராக 2010 மே மாதம் அவுஸ்திரேலியாவினால் நீதிக்கான ஐ.நா. சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த திமிங்கில வேட்டையானது வர்த்தக ரீதியிலான நோக்கங்களை அடைவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது என்று அந்த வழக்குக்கான முறைப்பாட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புக்கு தலைவணங்குவதாக ஜப்பான் இதற்கு முன்பு தெரிவித்திருந்தமையால் சர்வதேச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு சட்டரீதியில் ஜப்பானை பிணைத்து வைத்திருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர். நீதிக்கான ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி பீற்றர் டொம்கா வழங்கிய தீர்ப்புடன் ஜப்பானியர்களின் திமிங்கில வேட்டை தற்காலிகமாக இடைநிறுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தீர்ப்பினை அறிவித்துவிட்டு அவர் கூறுகையில்; 2005 ஆம் ஆண்டு முதல் அன்டாட்டிக் திமிங்கிலங்கள் வேட்டை என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரியவகை 3600 திமிங்கிலங்களை ஜப்பான் கொன்றுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

பொதுவாக ஜப்பான் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம் திமிங்கிலங்களை வேட்டையாடுவதுடன் இந்த செயற்பாடு விஞ்ஞான ஆய்வுகளுக்காக முன்னெடுக்கப்படுவது அல்ல என்றும் அவர் கூறுகின்றார். இதற்கிடையில், இந்த நீதிமன்றத் தீர்ப்பை அவுஸ்திரேலியாவும் நியூஸிலாந்தும் வரவேற்றுள்ளன. இத்தீர்ப்பிற்கு ஆதரவானவர்கள் பெரும் மகிழ்ச்சியை அடைந்துள்ளனர். எவ்வாறாயினும் ஜப்பான் இத்தீர்ப்புக்கு தலைவணங்கினாலும் இத்தீர்ப்புக் குறித்து கடும் கவலையைத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளது.




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடக் கலைத்துறையின் அபூர்வ படைப்பு

# அடிஷம் பங்களா!

வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் வெளிநாட்டவர்களின் மேற்பார்வையின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட, பல்வேறு கட்டட நிர்மாணங்களையும் நினைவுத் தூபி மற்றும் சிலைகளையும் இலங்கை முழுவதும் காணக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறானதொரு நிர்மாணம்தான் 'அடிஷம் பங்களா' (Adisham Bungalow) ஆகும்.



வரவேற்பறை கீழ் பகுதியில் அமைந்துள்ளது. அப்பகுதி சேர்.வில்லியர்ஸினதும் அவரது குடும்பத்தாருக்கும் சொந்தமான புராதன சிறப்புமிக்க தளபாடங் களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு பகுதியில் உலகப் புகழ்பெற்ற பிரித்தானிய ஓவியக் கலைஞரான டேவிட் பெய்ன்டரி னால் வரையப்பட்டுள்ள சேர்.வில்லியர்ஸின் உருவப் படம் ஒன்றும் உள்ளது. வரவேற்பறைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள புராதன சிறப்பு மிக்க புத்தக றாக்கையில், வில்லியர்ஸ்ஸின் குடும்ப உறுப்பினர்கள் பயன்படுத்திய நூல்கள் உள்ளன. பிரித்தானியா மற்றும் இலங்கையின் மிகவும் பழமையான நூல்களும் அவற்றிடையே உள்ளன.











ஹப்புத்தளை நகரில் அமைந்துள்ள 'களெனர்' தேயிலைத் தோட்டத்தினைக் கடந்து செல்லும்போது, மிகவும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் அடிஷம் பங்களாவானது, இன்றும்கூட இலங்கையின் சிறந்தொரு கட்டட நிர்மாணப் படைப்பாகவே கருதப்படுகின்றது.

1887 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரித்தானியாவின் தனவந்தர்களில் ஒருவராகத் திகழ்ந்த சேர். தோமஸ் லிஸ்டர் வில்லியர்ஸ் என்பவரே இந்த பங்களாவின் உரிமையாளரும் நிர்மாணிப்பாளருமாவார். அவர் இந்த அடிஷம் பங்களாவினை அதி சொகுசு வசதிகளுடன் நிர்மாணித்துள்ளார். அயர்லாந்தின் கட்டடக்கலை நுட்பங்களைப் பின்பற்றியதாக, இந்திய கட்டடக் கலைஞர்களால் இந்த பங்களா கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இதனை 'அடிஷம்' என்று அழைக்கக் காரணம் ஒன்றுள்ளது. அதாவது, தோமஸ் லிஸ்டர் வில்லியர்ஸ் பிறந்த இடம்தான் தென் கிழக்கு இங்கிலாந்தின் கென்ட் எனும் நாட்டிலுள்ள 'அடிஷம்' எனும் கிராமம் ஆகும். அதனால் அந்த கிராமத்தின் பெயரையே இந்த பங்களாவுக்கும் சூட்டியுள்ளனர்.

இந்த பங்களா, முழுமையாக கருங்கற்களினால் கட்டப்பட்டுள்ளது. 25 அறைகளைக் கொண்ட இந்த பங்களாவின் அனைத்து அறைகளிலும் வெப்பத்தை வழங்கவென நிலக்கரி அடுப்பு உள்ளது. இவற்றிலிருந்து வரும் புகையினை வெளியேற்ற கூரைப் பகுதியில் 6 புகைபோக்கிகள் உள்ளன.

விருந்தினர்களுக்கான

மேலும், பங்களாவின் உள்ளே உட்கூரைப்பகுதிகளில் தேக்கு மரத்தினால் வடிக்கப்பட்ட பலவித சிற்பக்கலை வடிவங்களையும் காணலாம். இந்த பங்களா கட்டப்பட்டு, சில தசாப்தங்களாக சேர்.தோமஸ் வில்லியர்ஸின் உரிமையாக இருந்ததோடு, 1948 இல் அவர் பிரித்தானியா செல்லும்போது விமலா விஜயவர்த்தனவினால் இந்த பங்களா கொள்வனவு செய்யப்பட்டது. பின்பு கிறிஸ்தவ மத அமைப்பிடம் இதன் உரிமை கையளிக்கப்பட்டது. இன்று இந்த பங்களா, கத்தோலிக்க மதகுருமார்களைப் பயிற்றுவிக்கின்ற, அவர்களின் அறிவை விருத்தி செய்கின்ற மடாலயமாக உள்ளது. - (பி)










இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, மே மாதம் 07 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 07, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org